(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1 (10).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

2010, செத்தெம்பர் 24, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2010, ஒற்றோபர் 05, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0126/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,—பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தெங்கு அபிவிருத்திச் சபை 6 வலயங்கள் அடிப்படையில் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இந்த 6 வலயங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 12 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கான கடமைகளைச் செய்வதன் மூலம் தெங்கு விவசாயிகளின் தேவைகள் உரியவாறு நிறைவேற்றப்படுகின்றன என அவர் திருப்தியடைகின்றாரா?

(இ) இந்த உத்தியோகத்தர்களை புதன்கிழமைகளில் மாத்திரமே சந்திக்க முடியும் என்பதை அவர் அறிவாரா?

(ஈ) இந்த மாவட்டத்தில் தெங்கு செய்கை கருத்திட்டங்களை முறையாக நடைமுறைப் படுத்துவதற்கு இந்த நிலமை இடையூறாக இருக்கின்றது என்பதை அவர் அறிவாரா?

(உ) இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அம்பாந்தோட்டை மாவட்டத்திற்காக தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள 6 வலயங்களை 10 வலயங்களாக அதிகரிக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஊ) இன்றேல், என்?

0216/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, அமைந்துள்ள கிராம சேவையாளர் பிரிவு, மற்றும் காணியின் இயல்பு யாதென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு காணியினதும் வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) ஆமெனில், மேற்படி காணிகள் எவ்விடயத்திற்காக எவ்வடிப்படையில் கையளிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(vi) காணிகளை பெற்றுக்கொண்ட ஆட்கள் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளிக்கப்பட்ட திகதி, காணியின் அளவு மற்றும் கால எல்லை யாதென்பதையும்,

(vii) ஒவ்வொரு காணியிலிருந்தும் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் சட்டவிரோதமான முறையில் ஆட்கள் அல்லது நிறுவனங்களினால் அனுபவிக்கப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், இவர்களின் பெயர், அனுபவித்து வரும் காணியின் அளவு, மற்றும் காலஎல்லை யாதென்பதையும்,

(iii) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை மற்றும் இதன் தற்போதைய நிலைமை யாதென்பதையும்,

(iv) ஆரம்பத்திலும் தற்போதும் ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(v) ஆரம்பத்தில் காணப்பட்ட காணியிலிருந்து கையளிக்கப்பட்ட காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(vi) உரிமை கையளிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர், முகவரி மற்றும் காணியின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0284/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 1978 தொடக்கம் 1988 வரை, 1989 தொடக்கம் 1994 வரை, 1995 தொடக்கம் 2009 வரை மற்றும் 2010 தொடக்கம் இற்றை வரையுமான காலப்பகுதிகளில் அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையை வருட மற்றும் மாவட்ட ரீதியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நிர்மாணிக்கப்படவிருக்கும் வீடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க மேற்கொள்ளப்படவிருக்கும் உத்தேச நடவடிக்கைகள் பற்றியும்,

(ii) வீடமைப்பு நோக்கத்திற்கான நிதியிடல் மூலங்களையும், தேவைப்படும் மக்களுக்கிடையில் இந்நிதி எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படும் என்பது பற்றியும்,

(iii) வீட்டை உடமை கொண்டிருக்கும் சமூகம் ஒன்றை ஊக்குவிப்பதற்கென மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகள் பற்றியும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0303/ ' 10

கௌரவ தயாசிறி ஜயசேக்கர, — சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008, 2009 ஆம் ஆண்டுகளில் மருந்து கொள்வனவுக்காக சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) அத்தொகையில் மேற்படி ஆண்டுகளுக்காக அமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற உண்மையான பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(iii) ஒவ்வொரு ஆண்டிலும் மருந்து கொள்வைனவுக்கு நியமிக்கப்பட்ட குழுவின் அங்கத்தவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கடந்த காலங்களில் ஏற்பட்ட மருந்து பற்றாக்குறைக்கு காரணம் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி போதைமையே என்பதனை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) இன்றேல் ஏன்?

0355/ ‘10

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கைச் சட்டக் கல்லூரியின் நுழைவுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க இயலுமான உச்ச வயது 35 ஆகவிருத்தல் வேண்டுமென ஒழுங்குவிதியொன்று ஆக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அது வர்த்தமானி அறிக்கையில் பிரசுரிக்கப்பட்டிருப்பின் அதன் பிரதியொன்று சபையில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்,

(iii) மேற்படி ஒழுங்குவிதி அங்கீகாரத்தின் நிமித்தம் பாராளுமன்றதத்திற்கு முன்வைக்கப்படும் திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அவ்விதம் உச்ச வயதை விதிப்பதற்கான தேவைப்பாடு உள்ளதா என்பதையும்,

(ii) அரசயிலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரைக்கும் அரச கொள்கைகளை நெறிப்படுத்தும் கோட்பாடுகளின் 27(2) (ஏ) உறுப்புரைக்கும் முரண்பட்டதாக அமையாதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கொழும்பு, இலங்கை திறந்த மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் சட்டமாணிப் (எல்.எல்.பீ.) பட்டதாரிகளுக்கு, இலங்கை சட்டக் கல்லுரியில் பிரவேசிப்பதற்கான உச்ச வயது விதிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இன்றோல், சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சை தொடர்பாக மட்டும் வயதெல்லை விதிக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) மேற்படி சட்டக்கல்லூரிக்கான அனுமதிப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான வயது எல்லை விதிப்பதைத் தவிர்க்குமாறு, சட்டக்கல்வி மன்றக் கட்டளைச் சட்டத்தின் 7(அ) பிரிவிற்கமைய, கட்டளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், எப்போது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0371/ ‘10

கௌரவ நூர்தீன் மசூர்,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதியளவில் வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய நிருவாக மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம் மக்களின் திருமணப் பதிவுக்காக அப்போதைக்கு நியமிக்கப்பட்டிருந்த, முஸ்லிம் திருமணப் பதிவாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவர்களின் பெயர்கள், முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) முஸ்லிம் திருமண, விவாகரத்துச் சட்டத்தின் கீழ், அந்நியமனங்கள் வழங்கப்பட்ட போது, அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய முஸ்லிம் பிரதேசம் யாதென்பதையும்

மாவட்ட மட்டத்தில் தனித்தனியே அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0406/ '10

கௌரவ திலங்க சுமதிபால,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கொழும்பு மாவட்டத்திலுள்ள,

(i) நான்கு பார்ச்சஸிலும் குறைந்த நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள குறைந்த வசதிகளைக் கொண்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) குறைந்த வசதிகளைக் கொண்ட அறுதி பெறப்படாத வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அறுதி பெறப்படாத வீடகள் அமைந்துள்ள மொத்த நிலப்பரப்பின் அளவு யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) வசதி குறைந்த இவ்வீடுகளை வசதி நிறைந்த வீடுகளாக மாற்ற அவர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல்,ஏன்?

0408/ ' 10

கௌரவ விக்டர் அன்ரனி,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 ஆம் ஆண்டு திசெம்பர் தொடக்கம் 2010 ஆம் ஆண்டு ஏப்பிரல் வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மின்வலு நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவ்வாறு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மின்வலு நிலையங்கள் யாவை என்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள மாவட்டங்கள் யாவையென்பதையும்,

(iv) இவ்வாறு புதிதாக மின்வலு நிலையங்களை அமைப்பதன் மூலம் தேசிய மின்வலு முறைமைக்கு சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மெகாவோட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(v) புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மின்வலு நிலையங்களுக்கான மதிப்பீட்டுச் செலவினம் ஒவ்வொரு மின்வலு நிலைய அடிப்படையிலும் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

0410/ '10

கௌரவ திலும் அமுனுகம,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் அரச சேவையிலிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) 2010 ஆண்டில் அரச சேவையிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) 2004 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலும் இந்த ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) இவ்வாறு அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0224/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பந்தோட்டை வலய கல்விக் காரியலத் திற்குட்பட்ட திஸ்ஸமகாராம கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் பரிபாலிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் என்னவென்பதையும்,

(iii) அப்பாடசாலைகளின் இன்றுவரை மூடிவிடப்பட்டுள்ள அல்லது மூடிவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் என்னவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இக் கோட்டாக்களில் உள்ளடங்கும் பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் என்னவென்பதையும்,

(iii) ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளின் பெயர் என்னவென்பதையும்,

(iv) பற்றாக்குறை காணப்படுகின்ற பாடகள் என்னவென்பதையும்,

(v) ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) அவ்வாறெனில், அது எக் கால எல்லைக்குள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0315/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கொழும்பில் 'ஐபா' நிகழ்ச்சியினை நடத்துவதற்கு இலங்கை இணங்கிய திகதியினையும்,

(ii) நிகழ்விற்கு நிதி வழங்கிய தரப்பினையும்,

(iii) பணம் பெறப்பட்ட திகதியினையும்,

(iv) மேலேயுள்ளவாறு பணம் செலுத்தப்படாவிட்டால், செலவினை ஏற்றுக் கொண்டவர் யார் என்பதனையும்,

(v) நிகழ்ச்சிக்கான மொத்தச் செலவினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) (i) 'ஐபா' நிகழ்ச்சியினால் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளையும்,

(ii) அவ்வாறான நன்மைகள் கிடைக்குமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0328/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமனம் பெறுவதற்கான தகைமைகள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி நியமனங்களை வழங்குவதற்கு அதிகாரமுள்ள நபர் அல்லது நபார்கள் யாவிர் என்பதையும்,

(iii) ஒரு வருடத்துக்குள் நியமிக்க இயலுமாயுள்ள ஜனாதிபதி சட்டத்தரணிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) 1994 முதல் இற்றைவரை நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி சட்டத்தரணிகளின் பெயர்கள் மற்றும் வயது யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0357/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் காணப்படும்,

(i) வாட்டுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) நோயளர்களுக்கான கட்டில்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(iii) சத்திரசிகிச்சைக் கூடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 மே மாதம் ஏற்பட்ட மழை காரணமாக சத்திரசிகிச்சைக் கூடம் உட்பட, இரண்டு வாட்டுகள் தவிர்ந்த ஏனைய அனைத்து வாட்டுகளும் நீரில் மூழ்கியதென்பதையும்,

(ii) இந்தப் பாரதூரமான நிலைமை கடந்த சில வருடங்களினுள் ஒரு வருடத்திற்கு பல தடவைகள் நடைபெற்றதென்பதையும்,

(iii) மேற்படி நிலைமையினைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) அவ்வாறாயின் இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(ii) எவ்வளவு காலத்திற்குள் மேற்படி நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0225/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பந்தோட்டை வலய கல்விக் காரியலத் திற்குட்பட்ட லுனுகம்வெஹெர கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் பரிபாலிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை என்ன என்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் என்னவென்பதையும்,

(iii) அப்பாடசாலைகளின் இன்றுவரை மூடிவிடப்பட்டுள்ள அல்லது மூடிவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் என்னவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(அ) (i) இக் கோட்டாக்களில் உள்ளடங்கும் பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் என்னவென்பதையும்,

(iii) ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளின் பெயர் என்னவென்பதையும்,

(iv) பற்றாக்குறை காணப்படுகின்ற பாடங்கள் என்னவென்பதையும்,

(v) ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) அவ்வாறெனில், அது எக்கால எல்லைக்குள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0344/10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) குருநாகல் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 30 ஆம் திகதியளவில் உரித்துடையவர்களாகவிருந்த சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதை அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை குருநாகல் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் சமுர்த்தி பயனாளிகளுக்காக வருடாந்தம் ஒதுக்கிய நிதி தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பண்டுவஸ்நுவர கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி பயனாளிகளாக இருந்து நீக்கப்பட்டவர்களின் பெயர், முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) அவர்கள் நீக்கப்பட்டதற்கான அடிப்படை என்னவென்பதையும்,

(vi) அப்பிரதேச செயாலளர் பிரிவு இரண்டிலும் சமுர்த்தி பயனாளிகளாக புதிதாக சேர்க்கப்பட்டவர்களின் பெயர், முகவரிகள் யாவை என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# 2010, ஒற்றோபர் 06, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0246/'10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய பெலிஅத்த கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0359/ ' 10

கௌரவ அஜித் பி. பெரேரா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கையிலுள்ள,

(i) அரச தேசிய பாடசாலைகளினதும் ஏனைய அரச பாடசாலைகளினதும் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(ii) முதலாம் வகுப்புத் தொடக்கம் உயர்தரம் வரை ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடைபெறுகின்ற அரச பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் சகல வகுப்புகளுக்கும் ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடைபெறாவிடினும் ஆகக் குறைந்தது ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடைபெறுகின்ற அரச பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(iii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பண்டாரகம மற்றும் மில்லனிய பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடைபெறுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) (i) ஆங்கில மொழிப் பயன்பாடு தொடர்பான எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கென சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஆகக் குறைந்தது ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படுகின்ற இரண்டு பாடசாலைகளையாவது உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) இன்றேல், இதன் பொருட்டு முன்வைக்கப்படுகின்ற மாற்றுத் தீர்வுகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0385/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் இன்றுள்ள தொலைத்தொடர்பு வழங்குனர்கள் மற்றும் செல்லிடத் தொலைபேசி நடத்துனர்களின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களின் பெயர், நாட்டில் அவர்கள் கட்டிய மூலதனப்பங்கு, மற்றும் அவர்களது இலாபங்கள் ஆகியவற்றையும்,

(iii) இலங்கையில் எவ்வளயவு காலமாக அவர்கள் செயற்படுகிறார்கள் என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நிலையான தொலைபேசி செயற்படுத்துனர்கள் மற்றும் செல்லிடத் தொலைபேசி செயற்படுத்துனர்கள் மீது மாதமொன்றிற்கு விதிக்கப்படும் வரி எவ்வளவு என்பதையும்,

(ii) கடந்த ஐந்து வருடங்களாக, நிலையான மற்றும் செல்லிடத் தொலைபேசிகளிலிருந்து அரசாங்கம் பெறும் மொத்த வருமானத்தை மாதாந்த அடிப்படையிலும்,

(iii) கடந்த நான்கு வருடங்களாக, ஸ்ரீலங்கா ரெலிகொம் பெற்ற இலாபத்தை வருடாந்த அடிப்படையிலும்

அவர் சபைக்கு தனித்தனியாகத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0461/ ' 10

கௌரவ நூர்தீன் மசூர்,— மீள் குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வடமாகாணத்தில் குடியிருந்து தற்போது புத்தளம் மாவட்டத்தில் கல்பிட்டி, முந்தலம், வனாத்து வில்லுவ மற்றும் புத்தளம் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்வாரியாக இடம்பெயர்ந்தோரை பதிவு செய்யப்பட்டுள்ள மக்களுக்கென உலக வங்கி வீடமைப்பு உதவித் திட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை முழுமையாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இந்த ஒவ்வொரு வீடமைப்புக்குமாக செலவு செய்யப்பட்ட முழுத் தொகை யாது என்பதையும்,

(iii) இக்குடியிருப்பாளர்களுக்கு வீடமைப்புக்கான நிதியுதவி வழங்குகையில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறை யாதென்பதையும்,

(iv) இது தவணை அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பின் ஒவ்வொரு தவணையிலும் வழங்கப்பட்ட தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இந்த உலக வங்கி வீடமைப்பு உதவித் திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்பட்ட நபர்களின் பெயர், முகவரி, திகதி மற்றும் செலவுச் சீட்டு இலக்கம் ஆகியவற்றை பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0485/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பல் தொழிற்பாட்டு நீர்வள திட்டமிடல் தேசிய கருத்திட்டம் என்ற பெயரில் கருத்திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்,

(ii) அதன் நோக்கங்கள் யாவை என்பதையும்,

(iii) ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி என்ற பெயரில் வேலைத் திட்டமொன்று உள்ளதாவென்பதையும்,

(iv) அதன் நோக்கம் யாதென்பதையும்,

(v) இவ்வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்களுக்கான நிதி கடனாக அல்லது உதவியாகப் பெற்றுக்கொள்ளப்படுகின்றதா என்பதையும்,

(ii) அந்நிதியை வழங்கும் நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0247/'10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய தங்காலை கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0435/'10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கையையும்,

(ii) மேற்குறிப்பிட்டவற்றுள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சி.பி.சி.), இலங்கை இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் (எல்.ஐ.ஓ.சி.) மற்றும் ஏனையவர்களினால் நடத்தப்படும் நிலையங்களின் எண்ணிக்கையை தனித்தனியாகவும்,

(iii) 2010, ஜனவரி 01 ஆம் திகதிக்குப் பின்னர் திறக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கையையும்,

(iv) எத்தரப்பினருக்கு புதிதாக திறக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தானங்கள் வழங்கப்பட்டன என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி (அ) (i) இன் பிரகாரம் எரிபொருள் நிரப்பு நிலையங்களினால் கடந்த 12 மாதங்களில், மாதமொன்றுக்கு விற்பனை செய்யப்பட்ட, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் லீற்றர் அளவை வெவ்வேறாக இவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0462/ '10

கௌரவ நூர்டீன் மசூர்,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நாட்டினுள் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களைச் சேர்ந்த திருமணமாகாத ஒருவர் விவாக ஒப்பந்தம் செய்கின்ற போது ஆட்கள், ஆதனங்கள், கைத்தொழில்கள் புனர்வாழ்வளிப்பு அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற நிதி உதவி எவ்வளவென்பதையும்,

(ii) 2004 ஆம் ஆண்டு முதல் 2010, மே மாதம் வரை புத்தளம், வனாதவில்லுவ, கல்பிட்டி, முந்தலம் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களைச் சேர்ந்த, மேற்படி நிதி உதவி வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இடம்பெயர்ந்துள்ள இரண்டு குடும்பங்களுக்கிடையில் திருமண ஒப்பந்தம் ஏற்கொள்ளப்படும் போது அந்த இரு சாராருக்கும் வழங்கப்படும் நிதித் தொகை மற்றும் அவ்வாறு நிதி வழங்கப்பட்டுள்ள சந்தர்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி (அ) (iii) இன் பிரகாரம் இடம்பெற்றுள்ள விவாகங்கள் மற்றும் இடம்பெயர்நத குடும்பமொன்றின் உறுப்பினரொருவராக செய்துள்ள விவாகங்களுக்கேற்ப 2004-2010 காலத்தினுள் வழங்க்ப்பட்டுள்ள நிதித் தொகை, நிதி பெறுநர்களின் பெயர்கள், முகவரிகள், நிதி வழங்கப்பட்டுள்ள திகதிகள், செலவுறுதிச் சீட்டு இலக்கங்கள் மற்றும் திகதிகள் யாவையென்பதை மேற்குறிப்பிட்டுள்ள பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0466/ ‘10

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அரசின் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும், அது தொடர்பாக எதிர்க்கட்சி பொறுப்புக் கூறவேண்டும் என்றும் முன்னாள் சுகாதார அமைச்சர் 2010.06.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார் என்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) அரசின் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஸ்தம்பிதமடைந்துள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(iii) தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஸ்தம்பிதமடைந்திருப்பின் மீண்டும் வெற்றிகரமான முறையில் அதனைச் செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0486/ ’10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொழில் உறவுகள், விளைவுப்பெருக்க மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியத்தில் தற்போதுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும் ,

(ii) அந்நிதியத்திற்கு சொந்தமான பணம் கொழும்பு பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், அப்பணத்தொகையின் பெறுமதி எவ்வளவென்பதையும்,

(iv) அவ்வாறு முதலீடு செய்யப்பட்டுள்ள கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிதியத்திலிருந்து லங்கா ஹோட்டல் கூட்டுத்தாபனத்தில் முதலீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்,

(ii) கொழும்பு பங்குச் சந்தையிலும் லங்கா ஹோட்டல் கூட்டுத்தாபனத்திலும் முதலீடு செய்யப்பட்டதன் மூலம் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

0248/ ’10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய அம்பலாந்தோட்டை கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனில் மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில் அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

என்பதை அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0444/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த ஐந்து வருடங்களிலே தோற்றுப்போன நிதிக் கம்பனிகளாக அறிவிக்கப்பட்ட நிதிக்கம்பனிகளின் மொத்த எண்ணிக்கையை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வைப்பாளர்களைப் பாதுகாப்பது இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பு என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) வைப்பாளரின் பணத்தைப் பெற்றுக்கொண்ட கம்பனிகளால் அப்பணம் திருப்பிச் செலுத்தப்படாத வைப்பாளர்களின் மொத்த எண்ணிக்கையையும்,

(ii) பணம் திருப்பச் செலுத்தத் தவறிய அல்லது கடமை தவறிய கம்பனிகளையும்,

(iii) மத்திய வங்கி தலையிட்டு, எந்தக் கம்பனியும் வங்குரொத்து அடையாது என உறுதியளித்த பின்னரும் 2010.06.01 இல் எவ்வாறு IFC மற்றும் CIFC வைப்பாளர்கள் தம் சேமிப்புக்களை இழந்தார்கள் என்பதையும்

அவர் இச்சபைக்குத் தனித்தனியாகத் தெரிவிப்பாரா?

(ஈ) (i) கம்பனி பணியாளர்களுக்கு என்ன நடந்தது என்பதையும்,

(ii) இந்நிதிக் கம்பனிகளின் வங்கி அறிக்கையிடல் என்று வரும் பொழுது, வேறுபட்ட பணிப்பாளர்களுக்கு வேறுபட்ட நியமங்கள் பிரயோகிக்கப்படுவது ஏன் என்பதையும்,

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

0463/ '10

கௌரவ நூர்டீன் மசூர்,— மீள் குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மீள் குடியேற்ற அமைச்சின் ஒதுக்கீடுகளின் மூலம் நேரடியாக அல்லது அந்த அமைச்சின் முன்மொழிவுத் திட்டத்தின் பிரகாரம் வேறு அமைச்சின் ஒதுக்கீடுகளின் மூலம் நடைமுறைபடுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் புத்தளம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த யுவதிகள் சுயதொழிலில் ஈடுபடும் பொருட்டு ஒவ்வொரு வருடத்திலும் நடத்தப்பட்ட தையல் பாடநெறிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) மேற்படி தையல் பாடநெறிகளுக்காக ஒவ்வொரு தவணையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட யுவதிகளின் எண்ணிக்கை, இவர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு தையல் பாடநெறிக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை, இதில் செலவிடப்பட்டுள்ள தொகை மற்றும் அச்செலவுத் தலைப்பு யாதென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இப்பாடநெறிகளுக்கான பயிற்சியாளர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டோரின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் முகவரிகள், இவர்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட விதம் மற்றும் செலுத்தப்பட்ட தொகை யாவையென்பதை ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன் ?

0467/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை துறைமுக அதிகாரசபையில் கடமையாற்றிய பத்திரகே நிஹால் பெரேரா மற்றும் எஸ்.பி. விமலவீர ஆகியோரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்த எச்.ஆர்.சீ/5432/03 மற்றும் எச்.ஆர்.சீ/5798/03 ஆம் இலக்கங்களைக் கொண்ட முறைப்பாடுகள் தொடர்பில் "உதவிப் பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவியில் ஏனையோரை நியமித்த திகதி தொடக்கம் நியமித்து, சம்பள படிமுறைகளை இற்றைப்படுத்த வேண்டுமென" அந்த ஆணைக்குழு 2005.12.12 ஆம் திகதி விதப்புரை செய்துள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 13/2005 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைய, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விதப்புரைகளை அமுல்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை கடமைப்பட்டுள்ளதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ii) மேற்கூறப்பட்டுள்ள விதப்புரைகளை அமுல்படுத்தாமை தொடர்பில் பாராளுமன்றத்தின் பொது மனுக் குழுவிற்குச் சமர்ப்பித்த மனு தொடர்பில் 2009.10.22 ஆம் திகதி எய்தப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய இவர்கள் இருவரினதும் நியமனங்கள் இதுவரை ஏன் வழங்கப்படவில்லை என்பதையும்,

(iii) பொது மனுக்குழுவானது, துறைமுக அதிகார சபையின் தலைவருக்கு அனுப்பிய 2009.11.24 மற்றும் 2010.02.09 ஆம் திகதியிடப்பட்ட கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளை அமுல்படுத்தாமைக்கான காரணங்கள் எவை என்பதையும்,

(iv) மேற்படி குழுக்கூட்டத்தில் ஏற்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய உரிய நியமனங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(v) ஆமெனின், எத்திகதியில் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0487/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தற்போது இலங்கையில் வெற்றிடமாயுள்ள கிராம உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் மேற்படி வெற்றிடங்கள் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(ii) இதற்கு முன்னர் நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு ஏற்ப மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(iii) இன்றேல், புதிய கிராம உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்கின்ற போது விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்ய வேண்டுமென அரசாங்கம் முன்வைக்கும் தகைமைகள் யாவையென்பதையும்,

(iv) புதிய ஆட்சேர்ப்புகளுக்கான மீண்டும் போட்டிப்பரீட்சை நடத்தப்படுமா என்பதையும்.

(v) அவ்வாறாயின், அது எப்போது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

## 2010, ஒற்றோபர் 07, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0249'/10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய சூரியவெவ கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனில் மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில் அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

என்பதை அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0390/ '10

கௌரவ றஊப் ஹக்கீம்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அக்குரெஸ்ஸ, கொடவத்த வீதி, கொடபிட்டிய முகவரியில் வசிக்கும் திருமதி எம்.ஏ. சித்தி பஸ்லிஹா, அக்குரெஸ்ஸ வ/றுஹுுணு பஸ் கம்பனிக்குச் சொந்தமான அக்குரெஸ்ஸ டிப்போவில் தரம் vi ஐச் சேர்ந்த எழுதுவினைஞராகப் பணியாற்றினாரென்பதையும்,

(ii) நிருவாக ரீதியான துர்நடத்தைக் குற்றச்சாட்டின் பேரில் 2004.12.17 ஆம் திகதியிலிருந்து அரைச்சம்பளத்துடன் இவரது சேவை இடைநிறுத்தப்பட்டது என்பதையும்,

(iii) மீண்டும் ஒழுக்காற்று விசாரணைக்குழுவின் தீர்மானத்திற்கிணங்க 2005.06.01 ஆம் திகதியிலிருந்து இவர் பதவிநீக்கம் செய்யப்பட்டாரென்பதையும்,

(iv) இது சம்பந்தமாக திருமதி. பஸ்லிஹாவினால் மாத்தறை தொழில் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு (இல: L/T/M26/70/2005) தள்ளுபடி செய்யப்பட்டது என்பதையும்,

(v) அதன் பின்னர் தென் மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்திற்கு (மாத்தறை) மேன்முறையீடொன்றினை (இல: S/P/HCC/MAAL/T06/2009) சமர்ப்பித்தார் என்பதையும்,

(vi) அதற்கிணங்க, 2010.05.04 ஆம் திகதி, நீதிமன்றம் திருமதி. பஸ்லிஹாவை மீண்டும் சேவையில் அமர்த்துமாறும், சேவை இடைநிறுத்தப்பட்ட காலத்துடன் தொடர்புடைய நிலுவைச் சம்பளம் அனைத்தையும் செலுத்துமாறும் கட்டளையிட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நீதிமன்றக் கட்டளை இற்றைவரை அமுலாக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்,

(ii) திருமதி. பஸ்லிஹாவை உடனடியாக சேவையிலமர்த்தி நிலுவைச் சம்பளத்தை செலுத்த தாமதமின்றி நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0420/ '10

கௌரவ ருவன் ரணதுங்க,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான வொக்ஷோல் வீதி, இலக்கம் 175 சீ, தொகுதியில் அமைந்துள்ள 4536 சதுர அடிகள் கொண்ட களஞ்சிய சாலை, கொழும்பு 03, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, 345 ஆம் இலக்க முகவரியில் அமைந்துள்ள குலோபல் தே பேக்ஸ் கம்பனிக்கு ரூபா 58,968.00 மாதாந்த வாடகைக்கு குத்தகையில் விடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட குத்தகை உடன்படிக்கைக்கு அரசின் விலை மதிப்பீட்டு அறிக்கையும், அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) சம்பந்தப்பட்ட குத்தகையாளர்கள் குத்தகை உடன்படிக்கைக்கு அமைவாக சட்டபூர்வமாக நடந்துகொண்டுள்ளனரா என்பதையும்,

(iii) அவ்வாறின்றேல் அதற்கெதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iv) குத்தகையாளர் சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்காவிடின் மேற்படி களஞ்சிய சாலையை மீண்டும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்.

(v) அவ்வாறு சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்காவிடின் அது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யாரென்பதையும்:

(vi) அவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0445/'10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைவரையான ஐந்து வருடங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக சென்றவர்களின் எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்பவர்கள் ஒரு காப்புறுதித்திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், அத்தகைய காப்புறுதிக் காப்பீடொன்றிற்கு ஒருவரிடமிருந்து எவ்வளவு தொகை அறவிடப்படுகின்றதென்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) கடந்த ஐந்து வருடங்களில் விடுக்கப்பட்ட இழப்பீட்டுக் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கையை அவர் தெரிவிப்பாரா?

(உ) காப்புறுதிப் பத்திரத்திற்கான கட்டணங்களை செலுத்திய போதேனும் மக்களுக்கு ஏன் இழப்பீடு கிடைப்பதில்லை என்பதை அவர் விபரிப்பாரா?

(ஊ) இன்றேல், என்?

0464/ ’10

கௌரவ நூர்தீன் மசூர்,— மீள் குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 தொடக்கம் 2010 வரை மீள் குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளிலிருந்து நேரடியாக அல்லது அந்த அமைச்சின் முன்மொழிவுத் திட்டத்திற்கமைய வேறு அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீடுகள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் புத்தளம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்களின் பெண்களுக்கு சுயதொழில்களில் ஈடுபடுவதற்கு வழங்கப்பட்ட தையல் இயந்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அந்த தையல் இயந்திரங்கள் கிடைக்கப்பெற்றவர்களின் பெயர்கள், முகவரிகள், அவை வழங்கப்பட்ட திகதிகள், செலவுறுதிச் சீட்டு இலக்கங்கள் எவை என்பதையும்,

(iii) அந்த ஒவ்வொரு தையல் இயந்திரத்தின் பெறுமதி மற்றும் ஒவ்வொரு தையல் இயந்திரத்தை கொள்வனவு செய்ய செலவிட்ட தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அந்த கருத்திட்டத்திற்காக ஒதுக்கிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) அதிலிருந்து செலவிட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) செலவுகள் மேற்கொள்ளப்பட்ட செலவுத் தலைப்பு யாதென்பதையும்

ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்புடையதாக பிரதேச செயலகப் பிரிவு அடிப்படையில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0488/ ’10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தற்போது, சிறைச்சாலைகளில் தண்டப்பணத்தைச் செலுத்த முடியாது சிறையிடப்பட்டுள்ள சிறைக்கைதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி சிறைக்கைதிகள் தொடர்பில் பின்பற்றப்படுகின்ற நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கைகள் இன்மையினால் சிறையிடப் பட்டுள்ள சிறைக்கைதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி சிறைக்கைதிகள் தொடர்பில் பின்பற்றப்படுகின்ற நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0504/ ‘10

கௌரவ சாந்த பண்டார,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) குருநாகல் மாவட்டத்தில் நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவினுள் குடிநீர் வசதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய அநேக பிரதேசங்கள் உள்ளன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேற்படி குடிநீர் வசதியினைப் பூர்த்தி செய்யும் முகமாக இற்றைவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தம்பதெனியா பிரதேசத்தில் விசேட நீர்க்கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டத்தின் முதலாவது கட்டம் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அதன் இரண்டாம் கட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0250'/10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய அம்பாந்தோட்டை கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

என்பதை அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0452/'10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஹிங்குராணை சீனித் தொழிற்சாலை அல்லது அதன் ஒரு பங்கு பிரவுன் அன்ட் கம்பனி லிமிடெட் உள்ளிட்ட தனியார் தரப்பினருக்கு வழங்கப்பட்டதா என்பதையும்,

(ii) இத் தொழிற்சாலையின் ஏனைய சகல தனியார்துறை பங்குதாரர்களின் பெயர்களையும்,

(iii) எப்போது, என்ன விலைக்கு, எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் இது வழங்கப்பட்டது என்பதையும்,

(iv) தனியார்துறையிடமிருந்து திறந்த போட்டி அடிப்படையிலான விலை மனு கோரப்பட்டதா என்பதையும்,

(v) இல்லையெனில், அதற்கான காரணத்தையும்,

(vi) விலை மனு கோரப்பட்டது எனில், அதனை சமர்ப்பித்த ஏனைய தரப்பினர்களது பெயர்களையும்,

(vii) குறிப்பிட்ட தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஹிங்குரானை சீனித்தொழிற்சாலையின் தற்போதைய நிலைமை என்ன என்பதையும்,

(ii) அரசாங்கம் தனியார் மயப்படுத்தலுக்கு எதிரானதா என்பதையும்,

(iii) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தனியார் மயப்படுத்தலுக்கு உட்பட்டதா என்பதையும்,

(iv) இல்லையெனில், அது எவ்வாறு அழைக்கப்படுகிறது என்பதையும்,

(v) பிரவுன் அன்ட் கம்பனியின் பணிப்பாளர்களது பெயர்களையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0489/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொழில் உறவுகள், விளைவுப்பெருக்க மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை தனியார் துறையில் கடமையாற்றும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) இவர்களுக்கு தற்போது செலுத்தப்படும் சம்பளம் அண்ணளவாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டில் தனியார் துறை ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் தொழில் அமைச்சர் என்றவகையில் அவர் தீர்மானமொன்றை எடுத்துள்ளாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அதற்கேற்ப தனியார் நிறுவனங்களுடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) அந்தந்த துறைகளில் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த சம்பள அளவுகள் யாவையென்பதையும்,

(iv) அந்த ஒப்பந்தங்களை சபையில் ஆற்றுப்படுத்துவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0505/ ' 10

கௌரவ சாந்த பண்டார,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் தம்பதெனிய தேர்தல் தொகுதிக்குட்பட்ட யாங்கல்மோதர எனும் இடத்தில் புகையிரதக் கடவையொன்று உள்ளதென்பதையும்,

(ii) அந்த இடத்தில் மரண விபத்துக்கள் பல நடைபெற்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) யாங்கல்மோதர புகையிரதக் கடவையில் விபத்துக்களை தடுப்பதற்கும் வாகன நெரிசலை குறைப்பதற்குமாக மேம்பாலம் ஒன்று அவசியமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) ஆமெனின், அவ்விடத்தில் மேம்பாலமொன்றை நிர்மாணிப்பதற்கு அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனின், அதற்கு செலவாகும் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) அந்த நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படும் காலகட்டம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0251/ ‘10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய திஸ்ஸமஹாராம கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

என்பதை அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0455/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கட்டுகநாயக்கா ஊடாக வெளிநாடுகளுக்கு விமானப் பயணம் மேற்கொள்பவர்களுக்கு புகையிரத சேவையொன்று வழங்கப்படுகிறதா என்பதையும்,

(ii) அது எப்போது ஆரம்பித்து வைக்கப்பட்டது என்பதையும்,

(iii) அது ஆரம்பிக்கப்பிட்டதற்கான காணரங்களையும்

அவர் குறிப்பிடுவாரா

(ஆ) (i) ஐவ்பா (IIFA)- சர்வதேச இந்தியத்திரப்படக் கழக விழா தொடங்கிய அன்று முதல் இச்சேவையை கொழும்பிலிருந்து கட்டுநாயக்காவுக்கு அல்லது கட்டுநாயக்காவிலிருந்து கொழும்புக்கு பயன்படுத்திய பயணிகளின் மொத்த எண்ணிக்கையையும்,

(ii) வருமானத்தின் பெறுமதியையும்,

(iii) பிரயாணச்சீட்டொன்றின் விலையையும்,

(iv) இச்சேவைக்கு அமர்த்தப்பட்ட ஊழியர்களின் மொத்த எண்ணிக்கையையும்,

(v) இச்சேவை ஏனைய பிரதேசங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா என்பதையும்,

(vi) இச்சேவையை விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதேசங்களையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0490/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அங்குள்ள அரசாங்க பிரதிநிதிகளினதும் ஒவ்வொரு நிறுவனத்தின் பிரதிநிதிகளினதும் பெயர்கள் தனித்தனியே யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் உள்ளடக்கத்தை மாற்றியமைப்பதற்கும் ரெலிகொம் நிறுவனத்தை தனியார் மயப்படுத்துவதற்கும் அரசாங்கம் உத்தேசிக்கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனின், அது எந்த அடிப்படையின் கீழ் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0545/ '10

கௌரவ சாந்த பண்டார,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 1948 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையிலான காலப்பகுதியினுள் இலங்கை விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்ட அந்த விளையாட்டு வீரர்களின் பெயர் பட்டியல் மற்றும் அந்த வீரர்கள் பெற்றுக்கொண்ட வெற்றிகள், அதனுடன் தொடர்பான வருடங்கள் என்பவற்றை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) எதிர்வரும் ஒலிம்பிக் போட்டி நடைபெறும் இடம் மற்றும் வருடம் யாதென்பதையும்,

(ii) அந்தப் போட்டிகளில் இலங்கையின் விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்கிறார்களா என்பதையும்,

(iii) அதன் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டம் என்ன என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 73/ '10

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ விஜயதாச ராஜபக்ஷ்,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ (பேராசிரியர்) ஜீ. எல். பீரிஸ் அவர்கள் மீது நம்பிக்கையின்மை,— இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம் தனக்கு அறிவுரை வழங்குவதற்கு வல்லுநர்கள் குழுவொன்றை நியமிப்பதற்கும் இன்னும் பல விளைவுகளுக்கும் வழிவகுத்து, சர்வதேச அளவில் இந்த நாட்டின் கௌரவத்தையும் நற்பெயரையும் பாதுகாக்க தவறிவிட்டமையாலும், பின்வரும் காரணிகளினால் சான்றுபடுத்தப்பட்டவாறு, இவ்விடயங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பல அறிக்கைகளை விடுத்திருப்பதாலும்,

(அ) "பின்னர் தோன்றிய பிரச்சினைகள், குறைபாடுகள் இருப்பின், நாங்கள் ஐக்கிய நாடுகள் சபைக்கு வந்து, 'பின்வருவனவற்றுடனான உதவிகளை நாங்கள் விரும்புகிறோம்' என்று கூறுவோம்" என்று தெரிவித்து அவர் 2010. 05.25 ஆம் திகதி எலிசபெத் டிக்ஸனுக்கு (வெளிநாட்டுக் கொள்கை பிரிவின் உதவி முகாமைத்துவ பதிப்பாசிரியர்) வழங்கிய பேட்டி.

(ஆ) எனினும், 2010.05.25 ஆம் திகதி ஐலண்ட் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டவாறு, "இந்நடவடிக்கை (ஐ.நா.விசாரணை) இப்போது மேற்கொள்ளப்படுவதற்கு எவ்வித சட்டரீதியான அல்லது தார்மீக நியாயமும் இல்லை"என பின்னர் கூறினார்.

(இ) மீண்டும் 2010.05.26 ஆம் திகதி டெயிலி நியூஸ் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டவாறு, "சர்வதேச விசாரணகள் நடத்துவதற்கு அல்லது குழுவொன்றை நியமிப்பதற்கான முன்மொழிவானது, இவ்வாணைக்குழுவின் பணியை இரு முறை செய்வதாக அமைவதோடு, இலங்கையில் எதிர்மறையான அரசியல் பின்விளைவினை ஏற்படுத்துவதாகவும் அமையும்" என்று கூறினார்.

ஆணைக்குழுவின் நியாயாதிக்கம் சர்வதேச மனித உரிமைகளின் மீறல்களுக்கான வகைகூறும் நடைமுறை தொடர்பான எவ்வித விசாரணைகளையும் உள்ளடக்க வில்லை என்பதையும், ஆணைக்குழுவின் வகைகூறும் பொறுப்பு உள்ளக்கப்படாமை யானது, ஐ.நா. இவ்விடயத்தில் தலையிடுவதற்கு ஏதுவாகக்கூடிய, அமைச்சரால் குறிப்பிடப்பட்ட ஒரு குறைபாடாகும் என்பதையும் முழுமையாக அறிந்து கொண்டு

(ஈ) இலங்கையின் மனித உரிமைகள் மீறல்கள் பற்றித் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஒரு குழுவினை நியமிக்க திரு பாங்கி மூன் எடுத்த முயற்சிகளை தடுத்து நிறுத்துவதற்காக நட்பு நாடுகளின், விசேடமாக அணிசேரா இயக்க நாடுகளின் ஆதரவினைத் திரட்டுவதற்கு அவரால் இயலாமல் போனமை.

(உ) இலங்கைக்கான பொது முன்னுரிமை முறைமையினை (ஜிஎஸ்பி) நிறுத்தப் போவதாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கு அவர் மேற்கொண்ட மிகைச்செயற்பாடு.

(ஊ) சீனா அவருக்கு விடுத்த அழைப்பில் குறிப்பிடப்பட்ட காலத்திற்கு மேல் அதிக காலம் அங்கே தங்கியிருந்ததன்மூலம் அழைப்பு விடுத்த நாட்டின் விருந்தோம்பலை துஷ்பிரயோகம் செய்து நாட்டிற்கு ஏற்படுத்திய அவமரியாதை.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ (பேராசிரியர்) ஜீ. எல். பீரிஸ் அவர்கள் இலங்கை அரசாங்கத்தில் அமைச்சராகக் தொடர்ந்து செயலாற்றுவதற்கான ஆற்றலில் இச்சபை நம்பிக்கை இழந்துள்ளதென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010, ஒற்றோபர் 08, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0252/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய லுணுகம்வெஹெர கோட்டக் கல்வி காரியாலயத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்க பாடசாலைகளில்,

(i) துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) கட்டிடத் தேவைகள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் தேவையான கட்டிடங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் கல்வியில் நவோதயம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை இப்பாடசலைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எவ்வளவு காலத்தினுள் என்பதையும்

என்பதை அவர் குறிப்படுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0314/'10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இந்நாட்டிலிலுள்ள அராசங்க மற்றும் அரசாங்கத்துடன் தொடர்புடைய பாடசாலைகளில் உள்ள ஆங்கில ஆசிரியர்களின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களுக்கு மாதமொன்றுக்கு வழங்கப்படும் தொகையையும்,

(iii) அவர்களுக்குரித்தான ஏனைய நன்மைகளையும்,

(iv) இலங்கையில் ஆங்கில ஆசிரியர்களுக்கான தேவையை மாவட்ட ரீதியாகவும்,

(v) ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக் குறையை நீக்குவதற்கென மேற்கொள்ளப் படுகின்ற நடவடிக்கைகளையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையைச் சேர்ந்த இரண்டாயிரம் ஆங்கில ஆசிரியர்கள் கொரிய நாட்டிற்கு அனுப்பப்படுவர் எனும் ஆலோசனையை அல்லது கூற்றை அவர் ஏன் தெரிவித்தாரெனவும்,

(ii) இந்நடவடிக்கையால் இலங்கைக்குக் கிடைக்கவுள்ள நன்மையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

0363/ ‘10

கௌரவ. ஆர். யோகராஜன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த சில வருடங்களாக,

(i) “உள்ளூரில் நெசவுசெய்து பதனிடல்”,

(ii) “நிறம் மற்றும் வேலைப்பாடற்ற துணியை இறக்குமதி செய்து உள்ளூரில் பதனிடல்”

எனும் இரு முறைகளில் பாடசாலைச் சீருடைகளுக்கான துணி வழங்குதல் மேற்கொள்ளப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி முறை (i) இன் மூலம் வழங்கப்பட்ட துணிகள் முடிவுறப்பெற்ற வடிவில் இறக்குமதி செய்யப்பட்டவை என்பதையும்,

(ii) துணிகளை வழங்கிய கம்பனிகள், பாரியளவில் நெசவு செய்வதற்கான அல்லது பதனிடுவதற்கான இயலளவு மற்றும் ஊழியர்களைக் கொண்டிருக்கவில்லை என்பதையும்,

(iii) கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினது 2009.11.24 ஆந் திகதிய கடித்தின் படி, அவர்கள் நூலை இறக்குமதி செய்வதற்கான இறக்குமதிப் பொருள் பட்டியலையும், சுங்க வெளிப்படுத்தல்களையும் சமர்ப்பிக்கத் தவறியுள்ளனார் என்பதையும்,

(iv) உள்ளூர்க்கைத்தொழிலை நிலைத்திருக்கச் செய்வதற்கென அவர்களுக்கு ஆதரவாக வழங்கப்பட்ட உயர்விலையை அவர்கள் தவறாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதையும்,

(v) அரசாங்கம் துணியை நேரடியாக இறக்குமதி செய்திருந்தால், அரசு 1.5 பில்லியனை மீதப்படுத்தியிருக்க முடியுமென்பதோடு, அதனை கல்வியின் ஏனைய செலவீனங்களுக்காகப் பயன்படுத்தியிருக்கலாம் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களையும் அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0364 /‘10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2005ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை போக்குவரத்து அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களிலுள்ள, அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானோரின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) இவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இவர்களுக்குச் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகைக்குத் தேவையான பணம் எவ்வளவென்பதையும்,

(ii) இழப்பீட்டுத் தொகைகளைச் செலுத்துவதற்காக அரசு இன்றளவில் ஒதுக்கியுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(iii) இதில் தற்போது செலுத்தப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

443/ ‘10

கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) காலி, கனம்பிட்டி வீதி, ஜெமில் மாவத்தையில், 97/46 பி இலக்க வீட்டில் வசிக்கும் திரு. எம்.எவ்.எம்.கபூர் மற்றும் இவரது குடும்ப அங்கத்தவர்களின் வருமானத்தை மிகை மதிப்புக்கு உட்படுத்தி பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரினால் விடயங்கள் முன்வைக்கப்பட்டதனால் கடந்த காலத்தில் இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சமுர்த்தி நிவாரண கொடுப்பனவு இரத்துச் செய்யப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வாழ்வதற்கு நிரந்தர வருமான வழி இன்றி, வறுமையில் வாடும், நோயால் பீடிக்கப்பட்ட பிள்ளை உள்ளிட்ட திரு. கபூரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு சமுர்த்தி நிவாரண கொடுப்பனவு இதுவரை வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்,

(ii) திரு. கபூர் மற்றும் இவரது குடும்ப அங்கத்தவர்களுக்கு உடனடியாக சமுர்த்தி நிவாரண கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0492/ ’10

கௌரவ ஆர்.எம். ரஞ்சித் மத்தும பண்டார,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையின் சனத்தொகையில் குடிநீர் வசதிகள் வழங்கப்பட்டுள்ளவர்களின் சதவீதம் யாதென்பதையும்,

(ii) மொனறாகலை மாவட்ட மக்களில் குடிநீர் வசதிகள் வழங்கப்பட்டுள்ளவர்களின் சதவீதம் யாதென்பதையும்,

(iii) மொனறாகலை மாவட்டத்திற்கு அருகில் அமைந்துள்ள அம்பாந்தோட்டை மாவட்ட மக்களில் குடிநீர் வசதிகள் வழங்கப்பட்டுள்ளவர்களின் சதவீதம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது நீர் வசதிகள் வழங்கப்பட்டுள்ள சில பிரதேசங்களைச்சேர்ந்த மக்களுக்கு வறட்சிக் காலத்தில் நீர் கிடைப்பதில்லை என்பதையும்,

(ii) குடி நீர் வசதி வழங்கப்படாதுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த வறிய மக்கள் சடுதியாக நோய்வாய்ப்படுகின்றனர் என்பதையும்,

(iii) கடந்த காலத்தில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மொனறாகலை மாவட்டத்தில் விசேட நீர்க் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், மொனறாகலை மாவட்டத்தில் தற்போது நீர் வசதிகள் இல்லாத பிரதேசங்களுக்கு நீர் வழங்குவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்தா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0493/ ‘10

கௌரவ சாந்த பண்டார,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) வடமேல் மாகாணத்தின் மிகப் பெரிய உள்ளூராட்சி சபை அலவ்வ பிரதேச சபை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) அதில் உள்ளடங்கும் பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(இ) நாரம்பல பிரதேச சபையென புதியதொரு உள்ளூராட்சி சபை நிறுவப்பட வேண்டுமென்ற கோரிக்கையொன்று உள்ளதை அவர் அறிவாரா என்பதையும்,

(ஈ) (i) இன்றளவில் அப்பிரேரணை தொடர்பாக அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி பிரேரணை அமுல்படுத்துவது துரிதமாக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0337/ ’10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அங்குனுகொல பெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின் திம்புல்கொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் வேகந்தவல திம்புல்கொட கிராமத்தில் 150 குடும்பங்கள் வரை வாழ்கின்றன என்பதையும்,

(ii) அந்தக் கிராமத்தில் 70 ஆம் இ லக்க முகவரியில் வசிக்கும் திரு. கே.கே. கிரிகோரிசின் வீட்டிற்கும் மற்றுமொரு வீட்டிற்கும் செல்லும் பாதை தவிர ஏனைய பாதைகளில் மின்கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளன என்பதையும்,

(iii) அந்த இரண்டு வீடுகளுக்கும் மின்சாரம் வழங்குவதற்கு 04 கம்பங்கள் தூரத்திற்கே மின்கம்பிகள் பொருத்த வேண்டியுள்ளது என்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது நடைமுறையில் இருக்கும் ரண்எலிலெட்ட திட்டத்தின் கீழ் இந்த 2 வீடுகளுக்கும் மின்சாரம் பெற்றுக்கொள்வதற்கான மின்கம்பிகளைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறு எனின், அது எப்போது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

0439/ ‘10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) புளியங்குளம் விமானப்படை முகாமில் கடைமையாற்றிய விமானப்படை வீரர் 11-TA 26125, ஆர்.எம்,என்.எஸ். ரத்நாயக்க தற்போது நோய்வாய்ப் பட்டுள்ளாரென்பதையும்,

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(iii) அவர் பழிவாங்கல் அடிப்படையிலான தாக்குதலுக்கு ஆளாகியுள்ளாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஆ) (i) அவர் குத்துச்சண்டை போட்டியொன்றில் ஈடுபட்டிருந்த போது மேற்படி விபத்து ஏற்பட்டிருப்பின் அவருடன் போட்டியில் ஈடுபட்ட விளையாட்டு வீரரின் எடைப் பிரிவு யாதென்பதையும்,

(ii) மேற்படி எடைப் பிரிவு அவரது எடைப் பிரிவுக்கு சமமானதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) நோய்வாய்ப்பட்டுள்ள வீரரொருவருக்காக விமானப் படையினால் வழங்கப்படும் சலுகைகள் திரு. ரத்நாயக்கவுக்கு வழங்கப்படுமா என்பதையும்,

(ii) நோய்வாய்ப்படும் போது அவரது வயது என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல் ஏன்?

0459/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இன்றுள்ளவாறு இன்னமும் முகாம்களில் தங்கியுள்ள, உள்ளக இடப்பெயர்வுக்குட்பட்ட நபர்களின் மொத்த எண்ணிக்கையையும்,

(ii) மீள்குடியேற்றப்பட்ட உள்ளக இடம்பெயர்வுக்குட்பட்ட நபர்களின் எண்ணிக்கையையும்,

(iii) குடும்பமொன்றிற்கு செலுத்தப்படும் தொகையையும்,

(iv) தற்போது அவர்கள் தமது சீவனோபாய வருமானத்தை எவ்வாறு சம்பாதிக்கின்றனர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அறிக்கைகளின்படி, இராணுவ வெற்றியின் இறுதிக் கால கட்டத்தின்போது தங்கம் (பவுண்) பெருமளவில் கண்டெடுக்கப்பட்டதை அவர் அறிவாரா?

(இ) (i) எவ்வளவு கிலோகிராம் தங்கம் கண்டெடுக்கப்பட்டதென்பதையும்,

(ii) தற்போது அவற்றிற்கு என்ன நேர்ந்துள்ளதென்பதையும்,

(iii) அதன் பாதுகாப்பிற்குப் பொறுப்பாயிருப்பவர் யார் என்பதையும்,

(iv) யாதேனும் குடும்பத்திற்கு அவர்களுடைய நகைகள் மீண்டும் வழ்ங்கப்பட்டதா என்பதையும்,

(v) ஆமெனில், அவர்களின் பெயர்களையும்,

அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0563/ '10

கௌரவ. ஆர். யோகராஜன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் பொறுப்பேற்கப்படுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த தோட்ட வைத்தியசாலைகளின் எண்ணிக்கையையும்,

(ii) இற்றைவரை பொறுப்பேற்கப்பட்டுள்ள தோட்ட வைத்தியசாலைகளின் எண்ணிக்கையையும்,

(iii) பொறுப்பேற்கப்பட்டுள்ள ஒவ்வொரு வைத்தியசாலையிலும் மேற்கொள்ளப் பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான முன்னேற்றங்களையும்,

(iv) மேற்படி வைத்தியசாலைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பணியாட் தொகுதியையும்,

(v) மேற்படி வைத்தியசாலைகளிலுள்ள தற்போதைய பணியாட்களை புதிய ஆளணியில் உள்ளீர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0339/ ' 10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தெ/றணகெலிய கிராம உத்தியோகத்தர் பிரிவின் திஸ்ஸமஹாராம யோதகண்டிய தெ/றணகெலிய முகவரியில் வதியும் திரு. டபிள்யூ. எம். சொமிபால ஜனசவி பெறும் ஒருவராக பதிவாகியிருந்து பின்னர் 2001 ஆம் ஆண்டில் H-T-15-85 இலக்கத்தின் கீழ் சமுர்த்தி பெறுநராக ரூபா. 375/- சமுர்த்தி கொடுப்பனவாகப் பெற்றுள்ளார் என்பதையும்,

(ii) இவர் ஜனசவி வீடொன்றின் நிரந்தரக் குடியிருப்பாளர் என்பதையும்,

(iii) மனைவி மற்றும் பிள்ளைகளைக் கொண்ட இவரின் குடும்பத்தை தற்செயலாகக் கிடைக்கும் கூலி வேலையைச் செய்து போசிக்கிறார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2001 ஆம் ஆண்டில் சமுர்த்தி கூட்டத்திற்கு வராத காரணத்தினால் செலுத்த நேரிட்ட ருபா.100 அபராதப் பணத்தைச் செலுத்த முடியாது பேனதால் இவரின் சமுர்த்தி முத்திரை இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இதனால், அன்று தொடக்கம் இன்றுவரை சமுர்த்தி பெறுநர்களுக்கு அரசினால் கிடைக்கும் சிறப்புரிமையை இவர் இழந்துள்ளாரென்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இவரது சமுர்த்தி முத்திரையை மீண்டும் செல்லுபடியானதாக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எத்திகதியிலிருந்து என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0472/'10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நாணயமாற்று வரம்பிடல் (Hedging) உடன்படிக்கையை அறிமுக்கபபடுவத்தியவர் யார் என்பதையும்,

(ii) அதன் நோக்கம் யாதென்பதையும்,

(iii) கேள்விப்பத்திரங்கள் ஏதும் கோரப்பட்டனவா என்பதையும்,

(iv) கேள்விப்பத்திர மனுதாரர்களின் பெயர்களையும்,

(v) இன்றேல், அதற்கான காரணத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நாணயமாற்று வரம்பிடல் நடவடிக்கைகள் தொடர்பில் இற்றைவரை ஏற்பட்டுள்ள மொத்தச் செலவையும்,

(ii) பொதுமக்களால் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையையும்,

(iii) அத்தகைய வழக்குகள் யாரால் எப்போது தெரடரப்பட்டன என்பதையும்,

(iv) அதன் பெறுபேறு என்னவென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) (i) ஏதேனும் வங்கிகளினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற் கெதிராக உள்ளக மத்தியஸ்த விசாரணைக்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், எங்கே, எத்தொகைக்கு என்பதையும்,

(iii) சட்டரீதியான பிரதிவாதத்திற்கு இற்றைவரை ஏற்பட்டுள்ள மொத்தச் செலவையும்,

(iv) சட்டச்செயற்பாடுகளுக்கான செலவாக எவ்வளவு செலுத்தப்பட வேண்டியுள்ளது என்பதையும்,

(v) மேற்படி வழக்குகளால் ஏற்பட்ட எதிர்பாராத பொறுப்புகளின் பெறுமதியையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0491/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2010 ஆம் ஆண்டளவில் இலங்கையிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) பெற்றுள்ள பட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு துறையின் கீழ் வேலையற்றோரின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) இவர்களுக்கு தொழில்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக அரசு புரிய வேலைத் திட்டமொன்றை நடைமுறைப் படுத்துமா என்பதையும்,

(ii) இல்லாவிடின், தற்போது அரசின் வசமுள்ள தொழில் வழங்கும் வேலைத் திட்டத்தை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0564/ '10

கௌரவ. ஆர். யோகராஜன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) புசல்லாவை, ப்ரோடப் தோட்ட வைத்தியசாலை 2009 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டது என்பதையும் ,

(ii) சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும்,

(iii) அக்கட்டடம் மக்கள் பாவனைக்காக ஒப்படைக்கப்படாமல் மூடப்பட்ட நிலையிலுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அக்கட்டடத்தை மக்கள் பாவனைக்காக திறந்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எப்போது திறந்து வைக்கப்படுமென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 69/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட பண வைப்பாளர்களுக்கு தமது நிதிகளை மீளச் செலுத்துதல்,— போலி நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிட்டு அதனால் ஏமாற்றமடைந்த அநேகமானோர் இருப்பதனாலும் கடந்த 2009/2010 தேர்தல் பிரசாரங்களில் இந்த அரசாங்கம் பண வைப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் மிகுதிப் பணத்தை மீளச் செலுத்த வாக்குறுதி அளித்திருப்பதனாலும் மத்திய வங்கி இந்நிறுவனங்களின் பொறுப்பாளராக இருப்பதனால் மிகவும் வினைத்திறனுடன் செயற்படவேண்டுமென்பதோடு பண வைப்பாளர்களுக்கு அவர்களது மிகுதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 70/ '10

கௌரவ புத்திக பதிரண,— அங்கவீனமுற்ற மற்றும் விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளுக்கு தொழிற்பயிற்சியை அளித்தல்,— அங்கவீனமுற்ற மற்றும் விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளுக்காக மாவட்ட, மாகாண மட்டங்களில் தொழிற்பயிற்சியை அளித்து அப்பிள்ளைகளை முறையான விதத்தில் தொழில்வாய்ப்புகளுக்கு அனுப்பும் திட்டமொன்று அமுல்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 71/ '10

கௌரவ புத்திக பதிரண,— சுதேச ஆயுர்வேத மருத்துவர்களுக்கு சமாதான நீதவான் நியமனங்களை வழங்கல்,— சுதேச ஆயுர்வேத மருத்துவர்கள் பணத்தையும் சிறப்புரிமைகளையும் எதிர்பார்க்காமல் அவர்களால் சமூகத்திற்கு ஆற்றப்படவேண்டிய சமூகப் பொறுப்பாகக் கருதி, குறிப்பாக கிராமிய மக்களுக்கு அளப்பெரும் சேவையை ஆற்றிவருவதனால், அச்சேவையை கௌரவிக்கும் வகையில் ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைவருக்கும் சமாதான நீதவான் பதவிகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 72/ '10

கௌரவ புத்திக பதிரண,— சமாதான நீதவான் பதவிகளை வழங்குவதற்கான முறையான வழிமுறையொன்றைத் தயாரித்தல்,— சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதும் சமுகத்திற்கு அளப்பரிய சேவையாற்றுவதுமான சமாதான நீதவான் பதவிகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளுக்குப் புறம்பாக வழங்கப்படுவதன் காரணமாக அப்பதவியின் கௌரவமும் அங்கீகாரமும் படிப்படியாக குறைவடைவதனால் குறித்த நியமனங்களுக்கென முறையான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

## 2010, ஒற்றோபர் 19, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0334/'10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் தற்போது செயற்படும் மாகாண சபைகளின் எண்ணிக்கையையும்,

(ii) ஒவ்வொரு மாகாண சபையினதும் வருடமொன்றிற்கான மொத்தச்செலவையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு மாகாண சபைக்கும் தெரிவு செய்யப்பட்டு, ஆளுங்கட்சி அல்லது எதிர்க்கட்சியைப் பிரதிநிதிப்படுத்தப்படுவதும் தற்போதைய உறுப்பினர்களின் பெயர்கள், பிறந்த திகதிகள் மற்றும் அவர்களின் அரசியற் கட்சிகள் ஆகியவற்றையும்,

(ii) மாகாண சபை உறுப்பினரொருவருக்கு உரித்தான நன்மைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

0407/ 10

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் இரக்வானை தேர்தல் தொகுதியின் கொடகவெல நகரத்தில் தேசிய நீர் வழங்கல் சபையினால் செயற்படுத்தப்படுகின்ற நீர் வழங்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(ii) அதன்மூலம் நீர் வழங்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வவென்பதையும்,

(iii) அதன் மூலம் குடிநீர் வழங்கப்படும் பிரதேச செயலகப் பிரிவுகள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி நீர் வழங்கள் திட்டத்தை துரிதமாக செயற்படுத்தாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(v) மேற்படி நீர் வழங்கள் திட்டம் முடிவுறுத்தப்படும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0441/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) முப்படையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் படையினருக்கும் தற்போது, ஓய்வூதியத்தில் 65% வழங்கப்படுகின்றதென்பதையும்,

(ii) மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இத்தொகை 85% வரை உயர்த்தப்பட வேண்டுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித்திட்டத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட வேண்டிய மேற்படி ஓய்வூதிய உயர்வு இற்றைவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், இது நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0542/ '10

கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடந்த தினம் அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு வைத்தியாசலைக்குச் சொந்தமான நோயாளர் வண்டி இனம் தெரியாதோரால் தீ வைத்து அழிக்கப்பட்டது என்பதையும்,

(ii) இதனால் மேற்படி வைத்தியசாலையின் கடுமையான நோயாளிகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாரை அவசர சிகிச்சைகளுக்காக வேறொரு வைத்தியசாலைக்கு கொண்டு போவதில் அசௌகரியங்கள் காணப்படுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) காரைதீவு வைத்தியசாலைக்கு நோயாளர் வண்டியொன்றினை வழங்குவதில் உள்ள தேவைப்பாடு குறித்து அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ள போதிலும், இதுவரை மேற்படி வைத்தியசாலைக்கு நோயாளர் வண்டியினை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அவ்வாறாயின் மேற்படி வைத்தியசாலைக்கு தாமதமின்றி நோயாளர் வண்டியொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0559/10

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த சனாதிபதித் தேர்தலின்போது முன்வைக்கப்பட்ட மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கின் கீழ் "ஓய்வுகால வாழ்க்கைக்கான உறுதுணை" திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றவர்களுக்கு நிவாரணமாக 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 2006 ஆம் ஆண்டு சம்பள முறைக்கு இசைவுறும் விதத்தில் ஓய்வூதியத்தைத் தயாரித்து அடுத்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து (2010) நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதியளிக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2010 வரவு செலவு திட்டத்தில் 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 2006 ஆம் ஆண்டு சம்பள முறைக்கு இசைவுறும் விதத்தில் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி நிவாரணம் 2010, வரவு செலவு திட்டத்தின் மூலம் வழங்கப்படாதிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(iv) குறித்த ஓய்வூதிய அதிகரிப்பை பெற்றுக்கொடுக்கும் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0560/ '10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் சில்லறை களஞ்சியங்கள் 24 மணி நேரமும் திறந்து வைக்கப்பட்டிருந்த காலக்கட்டத்தில் மேற்படி நிறுவனத்திற்குப் பொறுப்பாக செயலாற்றிய அமைச்சர் யாரென்பதையும்,

(ii) மேற்படி அமைச்சரின் பிரத்தியேக பணியாட்டொகுதிக்கான சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் பதவிப் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பதவிகளை வகித்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் முகவரிகள், பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அமைச்சர் பதவி வகித்த காலகட்டத்தில் இவரது பணியாட்டொகுதிக்கு மேற்படி அமைச்சிலிருந்து, அரசாங்க கூட்டுத்தபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளிலிருந்து, கூ.மொ.வி.நி.போன்ற இணைந்த கம்பனிகளிலிருந்து இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்களது பெயர்கள், முகவரிகள், வகித்த பதவிகள், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், பெற்ற ஏனைய சலுகைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) மேற்படி உத்தியோகத்தர்கள் அமைச்சின் பணியாட்டொகுதிக்கு இணைக்கப்படுவதற்கு முன்னர் சேவையாற்றிய நிறுவனங்கள் மற்றும் வகித்த பதவிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல் ஏன்?

0603/ '10

கௌரவ அருந்திக பெர்னாந்து,— துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் ,

(i) கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(ii) கொழும்புத் துறைமுகத்தில் வருடாந்தம் நெறிப்படுத்தப்பட்ட பண்டக் கொள்கலன்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) கொழும்புத் துறைமுகம் ஈட்டிய மொத்த வருமானம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எதிர்வரும் ஆண்டுகளில் கொழும்புத் துறைமுகத்தின் வருவாயை விருத்தி செய்வதற்கான உத்தேச வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0604/ '10

கௌரவ (டாக்டர்) ரோஹன புஷ்ப குமார,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நாடு முழுவதிலுமுள்ள பாற்பண்ணையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு பால் உற்பத்தி எத்தனை மில்லியன் லீற்றர்கள் என்பதையும்,

(iii) இப்பால் உற்பத்தி குறிப்பிட்ட ஒவ்வொரு வருடத்திலும் தேசிய பால் தேவைக்கு வெவ்வேறாக எத்தனை வீதத்தில் பங்களிப்புச் செய்தள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாற் பண்ணையாளர்களை பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்,

(ii) பால் கைத்தொழிலின் பயனுறுதியை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iii) பெருந்தோட்டத்துறையில் பாற்பண்ணையாளர்களின் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான விசேட வேலைத் திட்டமொன்றை செயற்படுத்துவதற்கான திட்டமொன்று உள்ளதா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அது யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0379/'10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இன்று பாராளுமன்ற உறுப்பிர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பொலிஸ் ஆளணியினர் அல்லது அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவு ஆளணியினர் ஆகியோரது எண்ணிக்கை என்னவென்பதை தனித்தனியாகவும்,

(ii) அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவினர் வேறுயாருக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ளர் என்பதையும்,

(iii) அவ்வாறு அனுமதிக்கப்பட்ட ஆளணியினர் எண்ணிக்கை என்னவென்பதையும்,

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இற்றைவரை பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் தவிர்ந்த ஏனையவர்களுக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ள அமைச்சுப் பாதுகாப்புப் பிரவினரின் பட்டியலொன்றை அவர் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) இன்று வரை பொலிஸ் அல்லது அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவினரின் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்கின்ற தோல்வியடைந்த அபேட்சகர்கள், தோல்வியடைந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரது பெயர்களையும்,

(ii) அவர்களுக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஆளணியினரின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் எங்கிருந்து பெறப்பட்டனர் என்பதையும்,

(iii) இவ்விதமான வேலைக்கமர்த்தலின் பொழுது பின்பற்றப்பட்ட நடைமுறை என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) உயர்நீதிமன்ற, மேல்நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பொலிஸ், நீதித்துறைப் பாதுகாப்புப் பிரிவு, அல்லது அமைச்சுப் பாதுகாப்பு பிரிவு ஆளணியினரின் எண்ணிக்கை என்னவென்பதையும் அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், என்?

0412/ '10

கௌரவ ரீ.ரஞ்சித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான வொக்ஷோல் வீதி, இலக்கம் 175 சீ, தொகுதியில் அமைந்துள்ள 2,227 சதுர அடிகள் கொண்ட களஞ்சிய சாலை, கொழும்பு 03, ஆர். ஏ. டி மெல் மாவத்தை 345 ஆம் இலக்க முகவரியிலுள்ள குலோபல் தே பேக்ஸ் கம்பனிக்கு ரூபா 30,065.00 மாதாந்த வாடகைக்கு குத்தகையில் விடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட குத்தகை உடன்படிக்கைக்கு அரசின் விலை மதிப்பீட்டு அறிக்கையும், அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) குத்தகையாளர் சம்பந்தப்பட்ட குத்தகை உடன்படிக்கைக்கு அமைவாக சட்டபூர்வமாக நடந்துகொண்டுள்ளாரா என்பதையும்,

(iii) அவ்வாறின்றேல் மேற்படி களஞ்சிய சாலையை மீண்டும் ம.தோ.அ.சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iv) சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்காவிடின் அது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யாரென்பதையும்,

(v) அவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0442/'10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடந்த தினங்களில் (Poseidon Leader) பொசீடன் லீடர் கப்பலின் மூலம் இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) இக் கப்பல் சொந்தமாயுள்ள கம்பனியின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கப்பலின் மூலம் கொண்டுவரப்பட்ட வாகன வகைகளின் பெயர்கள் தனித்தனியாக யாவையென்பதையும்,

(ii) இந்த வாகனங்கள் பயன்படுத்தப்பட்டவையா (Recondition) அல்லது பயன்படுத்தப்படாத புதிய (Brand new) வாகனங்களா என்பதையும்,

(iii) ஒவ்வொரு வாகனத்தினதும் பெறுமதி தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) (i) மேற்படி வாகனங்கள் கப்பலில் ஏற்றப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்,

(ii) அவை எக்கம்பனிகளுக்குச் சொந்தமானவையென்பதையும்,

(iii) இந்த வாகனங்களை இந்நாட்டுக்கு இறக்குமதி செய்தோரின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0544/10

கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) முதியோருக்கான தேசிய செயலகத்தின் மூலம் வழங்கப்படும் உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைக் கொண்டுள்ள முதியோர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளும் நிவாரணங்களும் யாவை என்பதையும்,

(ii) மேற்படி அடையாள அட்டையொன்றைக் கொண்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பமொன்றின் வயோதிபர் ஒருவருக்கு மாதந்தோறும் ஏதேனும் நிதி உதவித் தொகையொன்றை வழங்கும் வேலைத்திட்டமேதும் உண்டா என்பதையும்,

(iii) மகிந்த சிந்தனை கொள்கைகளின் பிரகாரம், மேற்படி அடையாள அட்டைகளை கொண்டுள்ள வயோதிபர் ஒருவருக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ள ஆட்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள், வசதிகள் மற்றும் நிவாரணங்களை செயற்படுத்துவதற்கு ஏதுவாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி சுற்றறிக்கைகளை அமுல்படுத்தும் நிறுவனங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0413/10

கௌரவ ரீ.ரஞ்சித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான வொக்ஷோல் வீதி, இலக்கம் 175 எவ், தொகுதியில் அமைந்துள்ள 5079 சதுர அடிகள் கொண்ட களஞ்சிய சாலை, கொழும்பு 02, வொக்ஷோல் வீதியில் அமைந்துள்ள, சமர்வில் கம்பனி எனப்படும் கம்பனிக்கு ரூபா 66,027.00 மாதாந்த வாடகைக்கு குத்தகையில் விடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட குத்தகை உடன்படிக்கைக்கு அரசின் விலை மதிப்பீட்டு அறிக்கையும், அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) சம்பந்தப்பட்ட குத்தகையாளர் குத்தகை உடன்படிக்கைக்கு அமைவாக சட்டபூர்வமாக நடந்துகொண்டுள்ளாரா என்பதையும்,

(iii) அவ்வாறின்றேல் மேற்படி களஞ்சிய சாலையை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iv) இந்தக் குத்தகை செலுத்தப்படுகையில் சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்காவிடின் அது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாரென்பதையும்,

(v) அவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0458/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இன்றுவரை தொழிற்பாட்டிலுள்ள நிலைதாங்கி பாரந்தூக்கிகளின் மொத்த எண்ணிக்கையையும்,

(ii) எவ்வளவு காலத்திற்கு முன்பு இவை ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்,

(iii) கடந்து இரண்டு வருடங்களில் இடம்பெற்ற மணித்தியாலம் ஒன்றிற்கான கொள்கலன் நகர்வுகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்,

(iv) சிங்கப்பூர், ஹொங்கொங், டுபாய், மலேசியா மற்றும் இந்தியாவிலுள்ள மும்பாய், சென்னை ஆகிய துறைமுகங்களுடன் ஒப்பிடுகையில் இதன் நிலைமை என்னவென்பதையும்,

(v) கடந்த மூன்று வருடங்களுக்கான கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் போக்குவரத்து எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாகவும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கொள்கலன்களுக்கான எட்டு நிலைதாங்கி பாரந்தூக்கிகளை கொள்வனவு செய்வதில் கொழும்புத் துறைமுகம் முதலீடு செய்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) இதன் மொத்த செலவு என்ன என்பதையும்,

(ii) விலைமனுக்கோரல் நடைமுறைகள் பின்பற்றப்பட்டதா என்பதையும்,

(iii) இல்லையெனில், அதற்கான காரணம் என்னவென்பதையும்,

(iv) வருமானம் எவ்வாறு அதிகரிக்கப்பட்டது என்பதையும்,

(v) ஆரம்பம் முதல் இறுதி கொடுப்பனவு வரையில் முழுக் கருத்திட்டத்திற்கான நிதி ரீதியான செலவு எவ்வளவு என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) தேவையற்றதும் சாதகமற்றதுமான இந்தக் கருத்திட்டத்தில் ஈடுபட்டதற்கான கிடைக்கப்பெற்ற போட்டி விலைகளுடன் ஒப்பிடுகையில் நியாயங்களையும் அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், என்?

0460/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இதுவரையுள்ள சிறைச்சாலை காவல் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த வெற்றிடங்கள் நிலவும் சிறைச்சாலைகள் எவை என்பதையும்,

(iii) அரசாங்கம் அந்த வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கின்றதா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அது எந்த அடிப்படையில் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த அரசாங்கத்தினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சிறைச்சாலை காவல் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அதற்காக கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறை என்னவென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

# 2010, ஒற்றோபர் 20, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0269/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 1990 தொடக்கம் 2010 வரை கொழும்புத்துறைமுகத்தில் கையாளப்பட்ட கொள்கலன் போக்குவரத்தின் அளவையும்,

(ii) கையாளப்பட்ட பொதுவான கப்பற் சரக்குகளின் அளவை அல்லது கொள்கலனில் இடப்படாத கப்பற் சரக்குகளின் அளவையும் வருடவாரியாகவும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எஸ்.ஏ.ஜீ.ரி. (சவுத் ஏஷியா கேட்வே ரேமினல்) உடன்படிக்கை எப்போது கைச்சாத்திடப்பட்டது என்பதையும் அதனுடைய நடவடிக்கைகள் எப்போது ஆரம்பித்து வைக்கப்பட்டன என்பதையும்,

(ii) அவ்வுடன்படிக்கையின் பிரதான நிபந்தைகளையும்,

(iii) சம்பந்தப்பட்ட தரப்பினர் அந்நிபந்தனைகளைப் பூர்த்திசெய்துள்ளாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இற்றைவரையிலான கடந்த பதினைந்து வருடங்களில் எஸ்.ஏ.ஜீ.ரி. யினது நடவடிக்ககைள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரும் அதன் பின்பும் கியூ.ஈ.கியூ (குயின் எலிசபெத் கே - எலிசபெத் மகாராணி இறங்குதுறை) இல் நிறைவேற்றப்பட்ட கொள்கலன்கள், மற்றும் பொதுவான கப்பற்சரக்குக் கையாளுதல் செயலாற்றுகையையும்,

(ii) கடந்து ஐந்து வருடங்களாக கியூ ஈ கியூ ஈட்டிக் கொண்ட வருமானம் மற்றும் தேறிய இலாபம் ஆகியவற்றை வருடவாரியாகவும்,

(iii) எஸ்ஏஜீரி இற்கு வழங்கப்பட்ட வரிச்சலுகைகளையும்,

(iv) வார விடுமுறை வழங்கியதால் ஏற்பட்ட வாய்ப்பு இழப்பையும்,

(v) இந்நடவடிக்கைகளினால் ஏற்படும் தேறிய இலாபம் அல்லது தேறிய நட்டத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0373/ '10

கௌரவ நூர்தீன் மசூர்,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதியளவில் வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய நிருவாக மாவட்டங்களில் முஸ்லிம் மத, கலாசார அலுவல்கள் திணைக்களத்திலும் வக்பு பிரிவிலும் பதிவு செய்யப்பட்டிருந்த -

(i) முஸ்லிம் பள்ளிவசல்கள், ஜும்ஆப் பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், சாவியாக்கள், தர்காக்கள் ஆகிய முஸ்லிம் மத புனித தலங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் பெயர்கள், முகவரிகள், பதிவிலக்கங்கள் யாவை என்பதையும்,

(iii) அந்த முஸ்லிம் பள்ளிவாசல்கள், புனித தலங்களின் சட்டபூர்வ நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக இலங்கை வக்பு சபையினால் அல்லது முஸ்லிம் மத, கலாசார திணைக்களத்தின் பணிப்பாளரினால் அப்போது நியமிக்கப்பட்டிருந்த நபர்களின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்,

(iv) அந்த ஒவ்வொரு முஸ்லிம பள்ளிவாசல்கள், புனித தலங்களுக்குச் சொந்தமானதெனக் கூறப்படும் (1965 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க முஸ்லிம் பள்ளிவசல்கள், புனித தலங்கள் அல்லது வக்பு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள) அசையா சொத்துக்கள், காணிகள் யாவை என்பதையும்,

(v) மேற்கூறிய ஒவ்வொரு வக்பு சொத்துக்கள் உள்ள இடங்களில் வரிப்பண இலக்கங்கள், முகவரிகள் யாவை என்பதையும்

மாவட்ட மட்டத்தில் அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0397/ '10

கௌரவ செஹான் சேமசிங்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அனுராதபுரம், புலன்னறுவை மாவட்டங்களில் 2009 ஆம் ஆண்டில் இனங் காணப்பட்ட சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அதனை முன்னைய அண்டுடன் ஒப்பிடுகையில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதா அல்லது குறைந்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ரஜரட்ட பிரதேசத்தில் சிறுநீரக நோய் பரவலாக காணப்படுவதற்கான காரணங்கள் இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அவை யாவை என்பதையும்,

(iii) குறிப்பிட்ட காரணிகளை பிரதேசத்திலிருந்து நீக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அல்லது அமுலாக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0405/ '10

கௌரவ (டாக்டர்) ரோஹன புஷ்ப குமார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் இதுவரை அறிக்கையிடப்பட்டுள்ள மொத்த எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை உயிரிழந்த நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) குருதி மாற்றுதலினூடாக எயிட்ஸ் நோய்க்கு உள்ளான நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) போதைப் பொருட்களை ஊசி மூலம் உடலில் செலுத்துவதால் எயிட்ஸ் நோய்க்கு உள்ளான நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(v) இந்நோய் ஏற்பட்ட தாயிடமிருந்து நோய் தொற்றுக்கு உள்ளான பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபையில் முன்வைப்பாரா?

(ஆ) (i) சுகாதார அமைச்சினால் 2007,2008,2009 ஆம் ஆண்டுகளில் எயிட்ஸ் நோயாளர்களுக்கு சிகிச்சைக்காக செலவிடப்பட்ட மொத்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) எயிட்ஸ் நோய் பரவுவதை தடுப்பதற்காக இற்றைவரை சுகாதார அமைச்சினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் எவை என்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0414/ '10

கௌரவ ரீ.ரஞ்சித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கண்டி, மெத தும்பரயில் அமைந்துள்ள ஹெயார்பாக் தோட்டத்தில் 976.75 ஹெக்ரயர் கொண்ட காணி களனி, வனவாசல புனஸ்ரா கிறீன் கார்டன் கம்பனியின் பணிப்பாளர் மஞ்சுல குணவர்தன என்பவருக்கு 2 மில்லியன் ரூபாவுக்கு குத்தகையில் விடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட உடன்படிக்கைக்கு அரசின் விலை மதிப்பீட்டு அறிக்கையும், அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) சம்பந்தப்பட்ட குத்தகையாளர் குத்தகை உடன்படிக்கைக்கு அமைவாக நடந்துகொண்டுள்ளாரா என்பதையும்,

(iii) அவ்வாறின்றேல் அதற்கெதிராக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்,

(iv) குத்தகையாளர் சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்காவிடின் சம்பந்தப்பட்ட உடன்படிக்கையை இரத்துச் செய்து காணியை மீண்டும் அரசுக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(v) அவ்வாறு சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்காவிடின் அது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யாரென்பதையும்,

(vi) அவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0468/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) எல்.ரீ.ரீ.ஈ. சர்வதேசப் பிரிவின் தலைவராக அறியப்பட்டுள்ள குமரன் பத்மநாதன் என்பவரைக் கைதுசெய்து இலங்கைக்கு அழைத்துவந்த திகதி யாது என்பதையும்,

(ii) இவருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) அவ்வாறாயின், அது எந்த நீதிமன்றத்தில் என்பதையும்,

(iv) இவர் தற்போது தடுத்து வைக்கப்பட்டிருப்பது சிறைச்சாலையொன்றிலா இல்லாவிடின் வேறு இடமொன்றிலா என்பதையும்,

(v) சிறைச்சாலையொன்றிலாயின் அதன் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவரை சமீபத்திய தினமொன்றில் வன்னிப் பிரதேசத்திற்கான விஜயமொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டதா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0605/ '10

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு மண்சரிவுகள் சம்பந்தமாக அரசாங்க மற்றும் தனியார் துறைகளின் ஆய்வுப் பணிகளுக்காக செலவு செய்துள்ள மொத்தத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி அமைப்பு மண்சரிவுகள் சம்பந்தமாக அரசாங்கத் துறையின் ஆய்வுப் பணிகளுக்காக நிதிசார் அறவீட்டினை மேற்கொள்கின்றதா என்பதையும்,

(iii) 2009 ஆம் ஆண்டில் மண்சரிவுகள் சம்பந்தமாக தனியார் துறையில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டதன் மூலம் மேற்படி அமைப்பு ஈட்டியுள்ள மொத்த வருமானம் எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மண்சரிவுகளினால் ஏற்படும் அழிவுகளை குறைப்பதற்கு அனர்த்த வலயங்கள் சம்பந்தமான தரவுகளை சேகரிக்கின்ற கருத்திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0606/ '10

கௌரவ ஹேமால் குணசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் இந்நாட்டில் எவ்வளவு ஹெக்டயார்களில் கறுவா பயிரிடப்பட்டதென்பதையும்,

(ii) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் தனித்தனியாக எத்தனை மெற்றிக் தொன் கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் கறுவா ஏற்றுமதியின் மூலம் ஈட்டிய வருமானம் எவ்வளவென்பதையும்,

(iv) 2009 ஆம் ஆண்டின் உள்நாட்டு கறுவா எற்றுமதியானது உலக சந்தையில் கறுவாவுக்கான கேள்வியில் எத்தனை சதவீதம் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நாட்டின் கறுவா உற்பத்திக்கு சர்வதேச மட்டத்திலான தரச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இன்றேல், சர்வதேச தரத்திலான கறுவாவை உற்பத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0415/ '10

கௌரவ ரீ.ரஞ்சித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான வொக்ஷோல் வீதி, இலக்கம் 175 ஏ, தொகுதியில் அமைந்துள்ள 5000 சதுர அடிகள் கொண்ட களஞ்சிய சாலை, கொழும்பு 02, வொக்ஷோல் வீதி 139ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள, சமர்வில் கம்பனி எனப்படும் கம்பனிக்கு ரூபா 67,500.00 மாதாந்த வாடகைக்கு குத்தகையில் விடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட குத்தகை உடன்படிக்கைக்கு அரசின் விலை மதிப்பீட்டு அறிக்கையும், அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) சம்பந்தப்பட்ட குத்தகையாளர் குத்தகை உடன்படிக்கைக்கு அமைவாக நடந்துகொண்டுள்ளாரா என்பதையும்,

(iii) சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்காவிடின் மேற்படி களஞ்சிய சாலையை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iv) அவ்வாறின்றேல் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0446/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) அமைச்சுக்களின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் தொடர்பான வர்த்தமானி 2010 ஏப்பிறல் 30 ஆம் திகதி வெளியிடப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) அதைத்தொடர்ந்து, இவ்வதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் மாற்றப்பட்டனவா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) ஆமெனில்,

(i) அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் குறைக்கப்பட்டுள்ள அமைச்சுக்கள்,

(ii) அவ்வதிகாரங்கள் யாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) அவ்வாறான மாற்றங்களுக்கான காரணங்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றுள்ளவாறு அமைச்சுக்களின் அனைத்து அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் அடங்கிய பூரண அட்டவணையொன்றை அவர் சமர்ப்பிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0469/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) எல்.ரீ.ரீ.ஈ. சர்வதேசப் பிரிவின் தலைவராக அறியப்பட்டுள்ள குமரன் பத்மநாதன் என்பவரால் நிர்வகிக்கப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ. க்கு சொந்தமான சர்வதேச சொத்துக்கள் அரசால் இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அச்சொத்துக்களின் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி சொத்துக்களில் இன்றளவில் இலங்கை அரசாங்கத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட சொத்துக்கள் யாவையென்பதையும்,

(iv) அவ்வாறு அரசுடைமையாக்கப்படாத சொத்துக்கள் யாவையென்பதையும்,

(v) மேற்படி சொத்துக்கள் இருப்பதாக தற்போது கண்டறியப்பட்டுள்ள நாடுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0609/ '10

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் சுதேச மருத்துவத் தேவை கருதி இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள மூலிகைச் செடி வகைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) குறித்த மூலிகைச் செடிகளின் இறக்குமதிக்காக மேற்படி வருடங்களில் ஏற்றுள்ள மொத்தச் செலவினம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த மூலிகைச் செடிகளை இந்நாட்டில் பயிரிடுவதற்காக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள வேலைத் திட்டமொன்று உள்ளதாவென்பதையும்,

(ii) அவ்வாறாயின், சம்பந்தப்பட்ட கருத்திட்டத்திற்காக இதுவரை செலவிடப் பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0416/10

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள,

(i) சிறிய தேயிலைத் தோட்டங்களின் நிலப் பரப்பு யாதென்பதையும்,

(ii) சிறிய தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) வரட்சியினால் பாதிக்கப்பட்ட சிறிய தேயிலைத் தோட்டங்களின் நிலப் பரப்பு யாதென்பதையும்,

(iv) வரட்சியினால் பாதிக்கப்பட்ட சிறிய தேயிலைத் தோட்டங்களின் சொந்தக்காரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சிறிய தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகார சபையினால் இதுவரை வரட்சியினால் பாதிக்கப்பட்ட தேயிலைத் தோட்டங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

(ii) அவ்வாறாயின் அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iii) வரட்சியினால் சிறிய தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பைக் குறைப்பதற்கு மீள் பயிர்ச்செய்கைக்காக நிவாரண உதவி வழங்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0456/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) கொழும்பு நகரிலுள்ள நடைபாதை வியாபாரிகளினது கடைகள் யாவற்றையும் உடைக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டதை அவர் அறிவாரா?

(ஆ) அவை எப்போது, ஏன் அகற்றப்பட்டன என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தற்போது கடைகள் யாவும் பூரணமாக அகற்றப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(iii) நடைபாதை வியாபரிகள் எவராயினும் தமது வியாபார நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளனர் எனின் அது சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளதா என்பைதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) (i) அகற்றப்பட்ட நடைபாதை வியாபாரிகளின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களுக்கு மாற்று இடங்கள் வழங்க்பபட்டனவா என்பதையும்,

(iii) அவர்களுடைய பெயர்களையும் வழங்கப்பட்ட மாற்று இடங்களையும்,

(iv) கொழும்பு நகரம் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் இப்பிரச்சினை நிலவுகின்றதா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இது ஓர் அரசியல் பழிவாங்கலாக மேற்கொள்ளப்பட்டது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) இன்றேல், என்?

0470/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) எல்.ரீ.ரீ.ஈ. உடன் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது அரச இராணுவத்தினரால், எல்.ரீ.ரீ.ஈ. வசமிருந்து எத்தனை கிலோகிராம் தங்கம் கைப்பற்றப்பட்டது என்பதையும்,

(ii) மேற்படி தங்கத்தை கண்டுபிடித்த இராணுவ உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்,

(iii) மேற்படி தங்கம் கையளிக்கப்பட்டுள்ள நீதிமன்றம் அல்லது இடம் யாதென்பதையும்,

(iv) மேற்படி தங்கத்தின் பெறுமதி ரூபாவில் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

# 2010, ஒற்றோபர் 21,வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0305/ ‘10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் நிறைவேற்றதிகார சனாதிபதி பதவியை ஆளொருவர் எத்தனை தவணைகள் வகிக்கலாம் என்பதையும்,

(ii) அத்தவணைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க எண்ணியுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனின், எத்தனை தவணைகள் வரைக்கும் என்பதையும்,

(iv) அவ்வாறு தவணைகளை அதிகரிப்பதில்லையெனின் நிறைவேற்றதிகார சனாதிபதி பதவியை இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் கருதுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0377/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையில் நடைபெற்ற IIFA (சர்வதேச இந்திய திரைப்பட விருது வழங்கல்) திரைப்பட விழா அமைப்பாளரின் பெயரையும்,

(ii) அதற்காக விலைமனுச் செய்த ஏனைய நாடுகளின் பெயர்களையும்,

(iii) இலங்கைக்கும் IIFAஇற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தையும்,

(iv) ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஆட்களின் பெயர்களையும்,

(v) IIFA காரணமாக இலங்கையர்களுக்கு ஏற்பட்ட மொத்தச் செலவையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) IIFA அனுமதிச் சீட்டுகளின் விற்பனை விலையையும்,

(ii) வழங்கப்பட்ட ஒரு மில்லியன் ரூபா பெறுமதியுள்ள அன்பளிப்பு அனுமதிச் சீட்டுகளின் எண்ணிக்கையையும்

(iii) அந்த அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்ட ஆட்களின் பெயர்களையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) ஷாருக் கான், அமிதாப் பச்சன் (விருது விழாவின் சிறப்புத் தூதுவர்) மற்றும் ஐஷ்வர்யா ராய் போன்ற பிரபல பிரதானிகள் ஏன் இலங்கைக்கு வந்து வைபவத்தில் கலந்துகொள்ளவில்லை என்பதையும்,

(ii) பிரபல பிரதானிகள் சமுகமளிக்காமையினால் 2010 ஜூன் 03ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்ட ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0417/ '10

கௌரவ ரீ.ரஞ்சித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான வொக்ஷோல் வீதி, இலக்கம் 175 இல் அமைந்துள்ள 5000 சதுர அடிகள் கொண்ட களஞ்சிய சாலை, கொழும்பு 10, ரீ.பீ ஜயா மாவத்தை 338 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள, அரீனா இன்ரர் நெஷனல் கம்பனிக்கு ரூபா 108,000.00 மாதாந்த வாடகைக்கு குத்தகையில் விடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட குத்தகை உடன்படிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரமும், அரசின் விலை மதிப்பீட்டு அறிக்கையும் பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) குத்தகையாளர் குத்தகை உடன்படிக்கைக்கு அமைவாகவும், சட்டபூர்வமாகவும் நடந்துகொண்டுள்ளரரா, இன்றேல் நடந்துகொள்கிறாரா என்பதையும்,

(iii) அவ்வாறின்றேல் மேற்படி களஞ்சிய சாலையை மீண்டும் ம.தோ.அ.சபைக்கு மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iv) சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்காவிடின் அது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யாரென்பதையும்,

(v) அவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0516/ '10

கௌரவ (திருமதி) ரோசி சேனாநாயக்க,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கையினுள் நாளொன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் பசுப்பாலின் அளவு, விவசாயிகளிடமிருந்து பாலைச் சேகரிக்கும் நிலையங்களின் எண்ணிக்கை, விவசாயிகளுக்கு ஓர் லீற்றர் பாலுக்காக செலுத்தப்படும் விலை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) உள்நாட்டு பசுப்பால் உற்பத்தியினை அதிகரிப்பதற்காக அமைச்சு எடுத்துள்ள செயற்பாடுகள் எவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0610/ '10

கௌரவ அருந்திக்க பெர்னாந்து,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டின் இறுதியளவில் சிறையிலடைக்கப்பட்டிருந்த தாய்மார் களுடனான பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) தாய் மற்றும் சேய் ஆகிய இருவரையுமே கைதிகளாக சிறையிலடைக்கப்படுவதை தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடடிவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2009 ஆம் ஆண்டின் இறுதியளவில் 22 வயதிற்குக் குறைந்த, சிறையிலடைக் கப்பட்டிருந்து கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி இளம் குற்றவாளிகளை பொதுக் கைதிகளிமிடருந்து விலக்கி வைப்பதற்காக நடைமுறையில் ஏதேனும் வேலைத்திட்டம் உண்டா என்பதையும்,

(iii) ஆமெனல், அது யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0327/10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் இலங்கை சுங்கத்திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்டுள்ள சட்டரீதியற்ற பொருட்களுக்காக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பரிசுகள் மற்றும் கொடுப்பனவுகளின் மொத்தப் பெறுமதி எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி பரிசுகள் மற்றும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்,

(iii) மேற்படி மேற்படி உத்தியோகத்தர்களுக்கு பரிசுகள் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவதற்குக் காரணமாக அமைந்த சம்பவங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்,

(iv) மேற்படி அந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0418/ '10

கௌரவ ரீ.ரஞ்சித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான வொக்ஷோல் வீதி, இலக்கம் 175 ஏ, தொகுதியில் அமைந்துள்ள 760 சதுர அடிகள் கொண்ட களஞ்சிய சாலை, மடுல்தெனிய, படகொல்லவத்த முகவரியில் வதியும் சாந்த ஜயசிங்க என்பவருக்கு ரூபா 10,260.00 மாதாந்த வாடகைக்கு குத்தகையில் விடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட குத்தகை உடன்படிக்கைக்கு அரசின் விலை மதிப்பீட்டு அறிக்கையும், அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) சம்பந்தப்பட்ட குத்தகையாளர் குத்தகை உடன்படிக்கைக்கு அமைவாக சட்டபூர்வமாக நடந்துகொண்டுள்ளாரா என்பதையும்,

(iii) அவ்வாறின்றேல் மேற்படி களஞ்சிய சாலையை மீண்டும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iv) சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக்காவிடின் அது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யாரென்பதையும்,

(v) அவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0429/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் வரும் விளையாட்டு அமைப்புக்களின் எண்ணிக்கையினையும்,

(ii) இந்த நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ள மாவட்டங்களின் பெயர்களையும்,

(iii) பிரதான பதவிகளை வகிப்போரின் பெயர்களையும்,

(iv) ஏனைய பிரதிநிதிகளின் பெயர்களையும்,

(v) அவர்களின் பிறந்த திகதிகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இவற்றுள் சட்டபூர்வமானதாக்கப்பட்டுள்ளவற்றின் பெயர்களையும் எண்ணிக்கையினையும்,

(ii) ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அரசாங்கம் வழங்கியுள்ள நிதியின் அளவினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 1973ம் ஆண்டின் 25ம் இலக்க விளையாட்டுக் கட்டளைச் சட்டத்தின் கீழும் மற்றும் 1993ம் ஆண்டின் 47ம் இலக்க விளையாட்டுத் திருத்தங்களின் கீழும் இந் நிறுவனங்களின் கணக்குகைளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமா என்பதையும்,

(ii) அவ்வாறான நிறுவனங்களினது கணக்குகளும் கிரிக்கட் சபையின் மத்திய கணக்குகளும் பாராளுமன்றத்திற்கு ஏன் சமர்ப்பிக்கப்படுவதில்லை என்பதையும்,

(iii) கடந்த ஐந்து வருடங்களுக்கான கிரிக்கட் சபையின் கணக்குகளையும்

அவர் அறியத் தருவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0517/ '10

கௌரவ (திருமதி) ரோசி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கையில் போசாக்கு பற்றாக்குறையுள்ள சிறார்கள் இருக்கின்றார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் தற்போதுள்ள போசாக்கின்மையினால் பாதிக்கப்பட்ட 05 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) வடக்கு கிழக்கில் போசாக்கின்மையினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பிள்ளைகளின் போசாக்கினை மேம்படுத்துவதற்காக சுகாதார அமைச்சின் கீழ் நடைமுறையிலிருக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் எவை என்பதையும்,

(ii) அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0611/ '10

கௌரவ அருந்திக்க பெர்னாந்து,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டின் இறுதியளவில் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மற்றும் சந்தேக நபர்கள் என்ற வகையில் சிறையிலடைக்கப்பட்டிருந்த கைதிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) சிறைச்சாலையினுள் தற்போது காணப்படும் இடவசதி எத்தனை கைதிகளுக்கு போதுமானதாகக் காணப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிறைச்சாலையினுள் காணப்படும் இட நெருக்கடியைக் குறைப்பதற்காக புதிய சிறைச்சாலை அமைக்கும் உத்தேச வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0419/ '10

கௌரவ ரீ.ரஞ்சித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கொழும்பு 10, டாலி வீதி, 320 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள 12,845 சதுர அடிகள் கொண்ட களஞ்சிய சாலை, கண்டி, விலியம் கொபல்லவ மாவத்தையிலுள்ள மெக்னா கெயார் சென்ரர் கம்பனிக்கு ரூபா 199,418.63 மாதாந்த வாடகைக்கு குத்தகையில் விடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட குத்தகை உடன்படிக்கைக்கு அரசின் விலை மதிப்பீட்டு அறிக்கையும், அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) குத்தகை உடன்படிக்கைக்கு அமைவாக சட்டபூர்வமாக நடந்துகொண்டிருக் காவிடின் சம்பந்தப்பட்ட களஞ்சியசாலையை மீண்டும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(iii) சட்டபூர்வமாக குத்தகைக்கு விடப்படாதிருப்பின் அது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யாரென்பதையும்,

(iv) அவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0430/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி திட்டமிடல் அமைச்சரினைக் கேட்பதற்கு,—

(அ) (i) அரசாங்கத்திற்குச் சொந்தமான சகல நிறுவனங்களின் பெயர்களையும், அவை ஒவ்வொன்றிலும் இற்றைவரை முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத்துடன் வெவ்வேறாகவும்,

(ii) கடந்த மூன்று வருடங்களாக அத்தகைய நிறுவனங்களில் பணியாற்றிவரும் ஆட்களின் எண்ணிக்கையினையும்,

(iii) அரசாங்கம் அந்நிறுவனங்களில் கொண்டுள்ள பங்குகளின் அளவினையும்,

(iv) மேலே (அ) (i) இலுள்ளவாறான நிறுவனங்களின் கடந்த வருடத்திற்கான இலாப, நட்டங்களை நிறுவன ரீதியில் வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) (அ) (i) இலுள்ள நிறுவனங்களில், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிற்கோ அல்லது அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கோ அறிக்கையிடாத நிறுவனங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அறிக்கையிடாமைக்கான காரணத்தையும்,

(iii) இது அரசியலமைப்பின் பிரிவு 148 ஐ மீறுகின்ற ஒரு செயலா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0484/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— மின்வலு, எரி சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) புத்தளம் முதல் மன்னார் வரையான பிரதேசத்தில் காற்று விசையால் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு ஏதேனும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனின், மதிப்பீட்டுக்கு அமைய அந்த கருத்திட்டத்திற்கு எவ்வளவு தொகை செலவாகும் என்பதையும்,

(iii) அதில் பிறப்பாக்கம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் மின்சாரம் மெகவோட் அளவில் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தை அமுலாக்குவதற்கு இதுவரையில் விண்ணப்பதாரிகள் எவரேனும் இருக்கின்றனரா என்பதையும்,

(ii) ஆமெனின், அந்த நிறுவனங்களினதும் நாடுகளினதும் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0518/ '10

கௌரவ (திருமதி) ரோசி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கையிலுள்ள கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மாரில் இரும்புச் சத்து குறைபாடு உடையவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவர்களின் போசாக்கை உயர்த்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iii) இலங்கையில் குறை நிறையுடன் பிறக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) 5 வயதுக்கு குறைந்த குழந்தைகளில் இரும்புச் சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட (i), (iii), (iv) இற்கு உரியதான புள்ளிவிபரங்கள் யாவை என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

0612/ '10

கௌரவ அருந்திக்க பெர்னாந்து,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2009 ஆம் ஆண்டினுள் போதைப்பொருள் சம்பந்தப்பட்ட குற்றங்கள் காரணமாக சிறையில் அடைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(ii) அது அவ்வருடத்தினுள் சிறையில் அடைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) போதைப்பொருள் சம்பந்தப்பட்ட குற்றங்கள் காரணமாக சிறைப்பிடிக்கப்பட்டவர்களுக்காக தனியான சிறைச்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளனவா,

(ii) அவ்வாறாயின் அவை யாவை,

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், என்?

# 2010, நவெம்பர் 09, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0260/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பெலியத்த கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008,2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாடப்புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாட விதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சி அடைவதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாட புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவையென்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0273/ ' 10

கௌரவ ராஜீவ விஜேசிங்க, — பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) சர்வதேச நெருக்கடிகள் குழு என அழைக்கப்பபடும் ஓர் அமைப்பைப் பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வமைப்பு இலங்கையில் தற்போது தனது பிரதிநிதிகளைக் கொண்டுள்ளளதா, அல்லது கடந்த பத்து வருடங்களில் இலங்கையில் இருந்தனரா என்பதையும், பிரதிநிதிகளைக் கொண்டிருந்தனரா என்பதையும்,

(ii) எவ் ஏற்பாடுகளின் கீழ் அது இலங்கையில் செயற்பட்டது என்பதையும்,

(iii) அதன் சர்வதேச செயற்பாட்டாளர்களுக்கு எவ்வாறு வீசா வழங்கப்பட்டது என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) (i) இவ் அமைப்பினால் இலங்கையில் வேலைக்கமர்த்தப்பட்ட இலங்கையர்களின் பெயர்களையும்,

(ii) அவர்களது கல்வி அல்லது ஏனைய தகைமைகளையும்,

(iii) சர்வதேச நெருக்கடிகள் குழுவினால் (ICG) அவர்கள் ஒவ்வொருக்கும் செலுத்தப்பட்ட தொகையையும், செலுத்தப்பட்ட அடிப்படையயும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) (i) அவ் அமைப்பு அல்லது அதன் ஊழியர்கள் எவராவது இலங்கைக்கு வரி செலுத்த வேண்டிய கடப்பாடு உடையவர்களா என்பதையும்,

(ii) ஆம் எனில், அக்கடப்பாட்டை நிறைவேற்றியுள்ளனரா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

0293/ ‘10

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதற்கமைய, 9 மீற்றர் நீளமான 21000 மரத்தூண்களும் 10 மீற்றர் நீளமான 3400 மரத்ததூண்களும் கொள்வனவு செய்வதற்காக விலை கோரப்பட்டது என்பதையும்,

(ii) குறைந்தபட்ச விலைகளைச் சமர்ப்பித்த அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும்,

(iii) இரண்டாவதாக குறைந்தபட்ச விலைகளை சமர்ப்பித்த தென்னாபிரிக்க நிறுவனத்திற்கு கேள்விப் பத்திரம் அளிக்கப்பட்டதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) எவ்வாறாயினும், 9 மீற்றர் நீளமான 10500 மரத்தூண்களும் 10 மீற்றர் நீளமான 1700 மரத்தூண்களும் கொள்வனவு செய்யப்பட்டதென்பதையும்,

(ii) இதில் தென் மாகாணத்திற்கு விநியோகிக்கப்பட்ட 2363 தூண்களில் 73 தூண்கள் மட்டுமே பாவனைக்கு எடுக்கப்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்கூறிய கேள்விப் பத்திரத்தை அளிக்காமை யினால் ரூபா 79.5 மில்லியன் நட்டம் ஏற்பட்டதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அந்த நட்டம் தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டியவர்களின் பெயர்கள் எவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0366/ ‘10

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) உலக சுகாதார அமைப்பின் தரங்களுக்கு அமைய மருத்துவர்களுக்கும் மக்களுக்கும் இடையில் காணப்பட வேண்டிய குறைந்தமட்ட விகிதாசாரம் யாது என்பதையும்,

(ii) சுகாதார அமைச்சு ஏற்றுக்கொள்கின்ற தரங்களுக்கு அமைய இலங்கையில் மருத்துவர்களுக்கும் மக்களுக்கும் இடையில் காணப்படவேண்டிய குறைந்தமட்ட விகிதாசாரம் யாது என்பதையும்,

(iii) தற்போது, இலங்கையில் மருத்துவர்களுக்கும் மக்களுக்கும் இடையிலான விகிதாசாரம் எவ்வளவு என்பதையும்,

(iv) மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) மாகாண சபைகளின் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் மருத்துவர்களின் எண்ணிக்கை வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) இலங்கைப் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் மருத்துவர்களை அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பதை நிறுத்துவதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0387/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடந்த ஆறு வருட காலப் பகுதியிலில் ஆஸ்பத்திரிகளிலிருந்த அகற்றப்பட்ட தரத்தில் குறைந்த மருந்து வகைகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) இவ்வாறு அகற்றப்பட்ட மருந்து வகைகளின் பெறுமதி எவ்வளசவு என்பதையும்,

(iii) இந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதி யாரால் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்,

(iv) இந்த மருந்து வகைகளை அழிப்பதற்கு அரசாங்கத்தினால் பணம் செலவிடப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) ஆமெனில், அத்தொகை எவ்வளவென்பதையும்,

(vi) தரத்தில் குறைந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்ததன் மூலம் ஒட்டுமொத்தமாக அரசுக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0411/ '10

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கண்டி ஹந்தான தோட்டத்திலிருந்து 45 ஏக்கர் 02 ரூட் 16 பர்சஸ் நிலப் பரப்பினை சட்டபூர்வமற்ற காணிப் பரிமாற்றமொன்றாக ஷhமினி கிரிஎல்ல மற்றும் பிலிப் ஜயவர்த்தன என்பவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இக் காணியானது சட்ட ரீதியாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்டதன் பின்னர் மட்டுமே வழங்கப்படமுடியுமெனினும், இந்த நடவடிக்கை முறையைப் பின்பற்றாது முன்னாள் அமைச்சரும், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் தலைவரும் மேற்படி காணியை சட்டரீதியற்ற வகையில் வழங்கியுள்ளனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) சட்ட ரீதியாக வழங்கப்படவில்லையெனின், இக்காணியை பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் மீள சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) சட்டரீதியற்ற இக்காணிக் கொடுக்கல் வாங்கலுக்குப் பொறுப்புக்கூற வேண்டியது யார் என்பதையும்,

(iii) இவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0431/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக பதவி ஏற்றதில் இருந்து, அவர் எத்தனை தடவைகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார் என்பதையும்,

(ii) விஜயம் செய்த நாட்டின் பெயர், விஜயத்துக்கான காரணம், அமைச்சருக்கான செலவு, கூடச்சென்றவர்களின் பெயர்கள், ஒவ்வொரு விஜயத்திலும் அவர்களால் ஏற்பட்ட செலவு ஆகிவற்றைத் தனித்தனியாகவும்,

(iii) இவ்வொவ்வொரு விஜயத்தினாலும் நாட்டுக்குக் கிடைத்த நன்மைகளையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 5 வருடங்களில், தற்போதைய அமைச்சருக்கு முன்பு அமைச்சராக இருந்தவர்கள் அதே நாட்டிற்கு எத்தனை தடவைகள் விஜயம் செய்தனர் என்பதையும்,

(ii) அவர்கள் செலவிட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0556/ '10

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2009.02.20 ஆம் திகதி பயங்கரவாத விமானத் தாக்குதலால் சேதமான உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகக் கட்டடத்தின் புனர்நிர்மாணப் பணிகளுக்கான அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட மொத்தப் பணம் எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அந்தக் கட்டடத்தில் திருத்தப்பணிகளை மேற்கொண்ட தனியார் ஒப்பந்தக்காரர் களின் பெயர்கள், ஒப்பந்தப் பெறுமதி மற்றும் செலுத்தப்பட்டுள்ள தொகை யாவை என்பதையும்,

(ii) கட்டடத்தின் ஒரு சதுர அடிக்கான மதிப்பீட்டுச் செலவு எவ்வளவென்பதையும்,

(iii) திருத்தத்துடன் தொடர்புடைய அனைத்து பணத் தொகையும் செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) திருத்தப்பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் வழங்கப்பட்ட போது முறையான கேள்விப்பத்திர நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறாயின், அது தொடர்பான விபரங்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(ii) மேற்படி பணிகளை நிறைவுசெய்ய உடன்பட்டுக் கொண்டுள்ள காலம் எவ்வளவென்பதையும்,

(iii) தற்போது கட்டடத்தின் புனர்நிர்மாணப் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) கட்டடத்தின் புனர்நிர்மாணப் பணிகளின் நிலைமை தொடர்பாக நிபுணத்துவ அறிக்கையொன்று பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0261/10

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்ல வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட வலஸ்முல்ல கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008,2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாட புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாட விதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடைவதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாட புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவையென்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0432/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஒரு நாட்டின் பணவீக்கத்தைக் கணிப்பிடும் அதிகாரசபை எதுவென்பதையும்,

(ii) இலங்கையில் கடந்த 15 வருடங்களில் வருடம் ஒன்றிற்கான பணவீக்க வீதம் எவ்வளவு என்பதையும்,

(iii) ஒவ்வொரு வருடத்தின் பணவீக்கத்திற்காகவும் ஏற்பாடு செய்த பின்னர், 1995 இல் இருந்த ரூபா 1,000 இன் இன்றைய உண்மைப் பெறுமானம் எவ்வளவு என்பதையும் (1995 இல் இருந்த ரூபா. 1000.00 இன் இன்றைய கொள்வனவுச் சக்தி)

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) நாட்டின் பொருளாதாரத்திற்கு பொறுப்பற்ற வழிகாட்டுதல்களை வழங்கப் பொறுப்பாகவிருந்த ஆட்களின் பெயர்களை அவர் குறிபப்பிடுவாரா?

(இ) இந்தியா, பாக்கிஸ்தான், மாலைதீவு, பூட்டான், நேபாளம், சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற நாடுகளின் கடந்த 5 ஆண்டுகளுக்கான பணவீக்கம் எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0557/ '10

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பயங்கரவாத விமானத் தாக்குதலினால் சேதமடைந்த உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டடத்தை திருத்தி முடிக்கும் வரை, திணைக்களப் பிரிவுகளை நிறுவும் பொருட்டு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டடங்கள் எவை என்பதையும்,

(ii) அந்த கட்டட உரிமையாளர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவை என்பதையும்,

(iii) ஒவ்வொரு வாடகைக் கட்டடத்திற்கும் செலுத்தப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iv) அவற்றின் வாடகை கால எல்லை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரிவுகள் தொடர்ந்தும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றனவா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அதற்கான காரணம் என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

262/10

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்ல வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட கட்டுவன கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008,2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாட புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாட விதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடைவதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாட புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவையென்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0433/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தற்போது வட கிழக்கு மாகாணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள சமய நிறுவனங்களின் இன்றுள்ளவாறான எண்ணிக்கையையும்,

(ii) அவற்றின் பெயர், முகவரிகளையும்,

(iii) இவற்றுள் மிகவும், முக்கியமான, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 20 சமய நிறுவனங்களின் பெயர்களையும்,

(iv) அரசாங்கத்தினால் அத்தகைய சமய நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகையையும்,

(v) அத்தகைய நிறுவனங்களில் உள்ள மதப் பெரியார்களின் பெயர்களை மத அடிப்படையிலும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0558/ '10

கௌரவ அஜித் குமார,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஐபா விருது வழங்கும் விழாவுக்காக சுகததாச உள்ளக விளையாட்டரங்கு நவீனமயமாக்கப்பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறு நவீனமயமாக்கும்போது விளையாட்டரங்கில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் பற்றிய முழு விபரங்கள் யாவையென்பதையும்,

(ii) இந்த நவீனமயமாக்கல் பணிகளை மேற்கொண்ட நிறுவனம் யாதென்பதையும்,

(iv) இதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்,

(v) அந்நிதியீட்டினை மேற்கொண்ட நிறுவனம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சுகததாச உள்ளக விளையாட்டரங்கினுள்,

(i) நவீனமயமாக்கலுக்கு முன்னர் இருக்கைகளைப் பெறக்கூடியதாகவிருந்த ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) நவீனமயமாக்கலுக்குப் பின்னர் இருக்கைகளைப் பெறக்கூடியதாயுள்ள ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?